# மோதுகையை மாற்றுநிலைப்படுத்தல்: ஒரு பல்பரிமாணப்பணி

ஹியூ மியால்




1. அறிமுகம் 82

2. மோதுகை மாற்றுநிலையாக்கக் கொள்கைகள் 83

மோதுகை மாற்றுநிலையாக்கக் கொள்கை என ஒன்று உள்ளதா? 83

மோதுகை மாற்றுநிலையாக்கக் கொள்கைகளுக்கான பங்களிப்புகள 85

மோதுகை கொள்கையிலிருந்து சூழமைவிலான மோதுகை கொள்கைக்கு 89

3. மோதுகைத் தீர்வு நடைமுறைகள் 95

மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் செயற்பாட்டாளர்கள் 95

கூட்டிணைப்பும் பல் தட இராஜதந்திரமும் 99

நடைமுறைகளின் தாக்கத்தை கணிப்பிடல் 101

4. முடிவுரை 103

5. உசாத்துணை நூல்களும், மேலதிக வாசிப்பும். 104

# மோதுகையை மாற்றுநிலையாக்கம்: ஒரு பல்பரிமாணப் பணி

ஹியூ மியால்

## 1. அறிமுகம்

அதி நவீன மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாடு என்றால் என்ன? மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாடு ஒன்று ஏற்கெனவே உள்ளதா? அவ்வாறாயின் அதன் அடித்தளம் என்ன? செயற்பாட்டாளர்கள் இக் கோட்பாட்டை தமது செயற்பாட்டுக்கு வழிகாட்டியாக நம்பலாமா? மோதுகைகளுக்கான காரணங்களைப் புரிந்துகொள்வதற்கும், இடையீடுகளின் விளைவை மதிப்பீடு செய்வதற்கும் ஆய்வாளர்கள் இதனைப் பயன்படுத்தலாமா? மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாட்டிலும் செயற்பாட்டிலும் காணப்படும் குறிப்பான அம்சங்களை அடையாளங்காணுவதையும், அதன் பிரதான பரிமாணங்களை இனங்காணுவதையுமே இக்கட்டுரை நோக்காகக் கொண்டுள்ளது. மோதுகைகளை ஆராய்வதற்கும் அவற்றுக்கு உகந்த விளைவுகளைக் காண்பதற்கும், அவற்றின் விளைவுகளை மதிப்பீடுசெய்வதற்கும் போதுமான அடிப்படையை ஆக்கவேண்டுமாயின், அத்தகைய மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாடு ஒன்று அவசியமாகும். அத்தகைய கோட்பாடு மோதுகைகளின் மாறுபடும் இயல்புக்கேற்ப தொடர்ச்சியாக சீர்செய்யப்படவேண்டியதுடன், உலகளாவிய மோதுகைகளையும், மோதுகை இடையீடுகளையும் கருத்திலெடுக்கக்கூடிய வகையில் தற்போதைய கோட்டுபாடுகள் மாற்றியமைக்கப்படவேண்டுமென்பதை எடுத்துரைக்கின்றது.



இக் கட்டுரையின் முதலாம் பிரிவு மோதுகை நிலைமாற்றக் கோட்பாட்டை மோதுகை முகாமைத்துவக் கோட்பாட்டிலிருந்தும், மோதுகைத் தீர்வுக் கோட்பாட்டிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. அது சில பிரதான மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறைகளை மேலும் விரிவாக ஆராய்ந்து, பின்னர் அவை ஒத்திசைவான, முழுமையான கோட்பாட்டுக்குப் பங்களிக்கின்றனவா என வினவுகின்றது. இதனைத் தொடர்ந்து அது உலகமயமாக்கல் சூழமைவின் அடிப்படையில் மோதுகைகள் பற்றிய எமது ஆய்வு சமூக, பிராந்திய, சர்வதேச சூழமைவுகளுக்கு முறையான கவனம் செலுத்தவேண்டுமென விவாதித்து, மோதுகைகள் கோட்பாட்டிலிருந்து சூழமைவான மோதுகைக் கோட்பாட்டுக்கு நகர்தல் வேண்டுமெனக் கருத்துத் தெரிவிக்கின்றது. வன்மையான மோதுகைகள் எழுந்த காலம்தொட்டு அவை தீர்க்கப்பட்டபின்னரான நீண்ட காலப்பகுதிவரை இவ்வேறுபாட்டு மட்டங்களில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை மேம்படுத்தும் காரணிகளையும் மோதுகைகளுக்குத் தூபமிடும் காரணிகளையும், நாம் ஆராயவும் வேண்டும். இவ்வழியாக அவ்வமைப்பினுள் இப்பிரிவு கல்துங் மற்றும் அசாரின் முரண்பாடுகளை உருவாக்கும் கோட்பாடுகளை முரண்பாட்டு நிலைமாற்றக் கோட்பாடுகளுக்கு விஸ்தரிக்கின்றது. அத்துடன், அது முரண்பாட்டு இடையீடுகளைத் திட்டமிடுவதற்கும், மதிப்பீடுசெய்வதற்கும் அடிப்படையாகப் பயன்படக்கூடிய வகையில் ஐந்துவகையான முரண்பாட்டு நிலைமாற்றங்களைக்கொண்ட கட்டுக்கோப்பு ஒன்றைப் பிரயோகிக்கின்றது. இரண்டாம் பிரிவானது அரசாங்க, அரசாங்கங்களுக்கிடையிலான பிரதிநிதிகள், அபிவிருத்தி முகவராண்மைகள் அரசாங்கசார்பற்ற அமைப்புக்கள் (பேமு), மோதுகைச் சூழ்நிலையில் உள்ள உள்ளூர் தரப்பினர் குழுக்கள் ஆகிய நான்கு பிரதான செயற்பாட்டுவகைகளில் நிகழ்ந்துள்ள முரண்பாட்டுச்சூழலினுள் முரண்பாட்டு மாற்றுநிலையாக்க நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திபற்றி ஆராய்கின்றது. இவ்வேவ்வேறு குழுக்களின் நடவடிக்கைகளைக் கூட்டிணைப்பதில் உள்ள பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் இறுதிப்பிரிவானது மோதுகை நிலைமாற்றத்தைச் சமாதானத்தைக் கட்டியெழுப்புவோரிலும் மோதுகைச் சமுதாயத்திலும் தேவைப்படும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வித்தாகக்கருதி வாதிடுகின்றது.

# 2. மோதுகை மாற்றுநிலையாக்கக் கொள்கைகள்

## 2.1 மோதுகை மாற்றுநிலையாக்கக் கொள்கை என ஒன்று உள்ளதா?

ஆகக்குறைந்தது மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாட்டுக்கான அடித்தளமாயினும் இடப்பட்டுள்ளது. எனினும், இத்துறையில் பல்வேறுவகைப்பட்ட கோட்பாட்டியலான அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுவருகின்றன என்பதும் உண்மையாகும் இக்கோட்பாடுகள் வேறுபட்ட நியம உதாரணங்களையும், வெவ்வேறுவகையான இடையீட்டாளர்களையும் பிரதிபலிப்பவையாக உள்ளன. (அரச, அரசசார்பற்ற உள்ளக மற்றும் வெளிவாரி) வெவ்வேறு எழுத்தாளர்களும், தொழில் புரிவோரும் அடிப்படைக் கருதுகோள்களையும், பதங்களையும் முறையற்றவகையில் பயன்படுத்துகின்றனர். குறிப்பாகச் சொல்லப்போனால் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்ற பதம் இத்துறையை விரிவாக விளக்கும் நோக்கம்கொண்டதாய் மோதுகை முகாமைத்துவம் மற்றும் மோதுகைத் தீர்வினை ஒத்ததாக உள்ளதா அல்லது மற்ற இரு அணுகுமுறைகளையடுத்தும் வேறுபடுத்தக்கூடிய வகையில் தனிப்பட்ட ஆக்கக் கூறுகளைக் கொண்டதா என்பது தெளிவாகவில்லை. எனது வாதம் மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கென தனிப்பட்ட ஒரு கோட்பாடு நிச்சயமாக உருவாகி வருகிறது என்பதேயாகும். எவ்வாறாயினும், இப்புதிய கோட்பாடு பரிச்சயமான பல மோதுகை முகாமைத்துவ மற்றும் மோதுகைத் தீர்வுக் கருதுகோளுக்கே இட்டுச்செல்கிறது எனவும் அத்துடன் மோதுகைகள் தொடர்பான வழமையான கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது எனவும் நான் அவதானித்துள்ளேன். இதனை முற்றிலும் ஒரு புதிய அணுகுதலாகக் கருதாது சமகால மோதுகைகளுக்குப் பொருத்தமானவகையில் இத்துறையின் பொதுமைக் கருத்துகள் மீளமைக்கப்பட்டிருப்பதாகக் கருதலாம்.

மோதுகைகளின் இயல்புகளிலுள்ள சில பிரதான மாற்றங்கள் அத்தகைய ஒரு மீள் கருத்துருவாக்கத்தை அவசியப்படுத்துகின்றன. முதலாவதாக, சமகால வன்மையான மோதுகைகளில் அனேகமானவை அதிகாரம் அந்தஸ்து ஆகியவற்றில் சமமின்மையுடன், சமச்சீரற்றவையுமாகும். இரண்டாவதாக, (இத்தொகுதியில் டான் ஸ்மித் அவர்களின் பங்களிப்பினைக் காண்க) பல சமகால மோதுகைகள் நீண்டகாலம் நீடிப்பவையாகவும் மீண்டும் மீண்டும் வன்செயல்களுக்கு இட்டுச்செல்பவையாகவும், வன்செயல்களால் தூண்டப்படுபவையாகவுமிருந்து சுற்றுச்சுழல் வடிவத்துக்கு அல்லது மணி வடிவத்துக்கு எதிரானவையாகவுள்ளன. மூன்றாவதாக, நீடித்த மோதுகைகள் சமூகத்தையும், பொருளதாரத்தையும், அவை அமைந்துள்ள பிரதேசத்தையும் சிதைத்து, ஒரு பக்கம் உள்ளூர் போராட்டங்களாலும், மறுபக்கம் ஆயுத வர்த்தகம் வெளிநாட்டு அரசுகாளால் அரசுக்கு அல்லது கிளர்ச்சிக்காரருக்கு ஆதரவு போன்ற உலகளாவிய காரணிகளாலும் தூண்டப்பட்டு சிக்கலான அவசரகால நிலைமைகளை உருவாக்குகின்றன. இச்சிக்கலான சூழ்நிலைகள் மோதுகைத் தீர்வில் நாம் காணும் பிரதான கோட்பாடுகளின் ஒப்பீட்டளவான எளிமைக்கு, குறிப்பாக இரு தரப்பு போட்டிகளில் வெற்றி, வெற்றி விளைவை ஊக்குவிப்போருக்கு முற்றிலும் முரண்பட்டதாக உள்ளன. அவற்றுக்கிடையே காணப்படும் பிரதான விடயங்களை அங்கீகரிக்கும் அதேவேளையில் புளூம்பீல்ட் மற்றும் ரெய்லி ஆகியோரின் கூற்றின் பிரகாரம் அனைத்துமுள்ளிட்ட இத்துறையினுள் அவற்றுக்கிடையே தழுவிக்காணப்படும் பிரதானமான விடயங்களை அங்கீகரிக்கும் அதேவேளை (ரெயிமானின் பங்களிப்பைப் பார்க்கவும்) மூன்று வெவ்வேறு சிந்தனைப் போக்குகளை அடையாளங்காணுவது பயனளிக்கும்.



இம்மூன்று மோதுகை இடையீட்டுக்கான வெவ்வேறு அணுகுமுறைகளை இணைப்பதோடு மோதுகைகள் தொடர்பான வெவ்வேறு எண்ணக்கருவாக்கங்களையும் பிரதிபலிக்கிறன.

மோதுகை முகாமைக் கோட்பாட்டாளர்கள் சமூகங்களினுள்ளும், சமூகங்களினிடையிலும் காணப்படும் வேறுபட்ட விழுமியங்கள் மற்றும் விருப்பங்களின் தீர்க்கமுடியாத விளைவாகவே வன்மையான மோதுகைகளை நோக்குகின்றனர். வன்முறைக்கான மனப்பாங்கு தற்போதுள்ள நிறுவனங்களின் வரலாற்றுத்

தொடர்புகள் காரணமாகவும், தாபிக்கப்பட்ட அதிகாரப் பரவல் காரணமாகவும் எழுந்துள்ளது. அத்தகைய முரண்பாடுகளைத் தீர்ப்பது யதார்த்தமற்றதாகவே கருதப்பட்டது. அவற்றைச் சமாளித்து, கட்டுப்படுத்தி செயலை ஒதுக்கி வைத்து, இடைக்கிடையே வரலாற்று முக்கியம் வாய்ந்த இணக்கம் ஒன்றைக் காணுவதே சிறந்த வழியாகும். மோதுகை முகாமைத்துவமானது அரசியல் தீர்வுகளை எட்டும்பொருட்டு குறிப்பாக அதிகாரமும், வளங்களுமுள்ள மோதும் தரப்பினரிடையே தீர்வுகாணும் வகையில் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் சக்திவாய்ந்த செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருத்தமான இடையீடுகளைப் பிரயோகிக்கும் ஒரு கலையாகும். அத்துடன் அது தவிர்க்க முடியாததாக மோதுகைகளைப் பொருத்தமாக வழிநடத்தும்பொருட்டு ஏற்ற நிறுவனங்களை வடிவமைக்கும் கலையுமாகும்.

> புளும்பீல்ட் மற்றும் ரெயிலியின் கூற்றுப் பிரகாரம் மோதுகை முகாமைத்துவம் வேறுபாடுகளையும், விலகல்களையும் நேராகவும், ஆக்கபூர்வமாகவும் கையாளுகின்றது. மோதுகைகளை நீக்குவதற்கான வழிவகைகளைப் பரிந்துரை செய்வதைக்காட்டிலும் மோதுகைகளைச் சமாளிப்பது, அதனை எவ்வாறு ஆக்கபூர்வமாகக் கையாளுவது, மோதும் தரப்பினைரை எவ்வாறு கூட்டுறவு முறையில் இணைப்பது, வேறுபாடுகளின் ஆக்கபூர்வமான முகாமைத்துவம் கருதி கூட்டிணைப்பு முறைமையை நடைமுறைசாத்தியமான வகையில் எவ்வாறு வடிவமைப்பது போன்ற விடயங்களை ஆராய்வதிலேயே அது கவனஞ்செலுத்துகின்றது.
>
> (புளூம்பீல்ட் மற்றும் ரெயிலி 1998 18).

இதற்கு மாறாக மோதுகைத் தீர்வுக் கோட்பாட்டாளர்கள் மோதுகைகளின் இந்த அதிகார அரசியல் கண்ணோட்டத்தை நிராகரிப்பதுடன் இன, அடையாள மோதுகைகளில் மக்கள் அவர்களது அடிப்படைத் தேவைகளை விட்டுக்கொடுக்கமுடியாது என வாதிடுகின்றனர். எவ்வாறாயினும், தரப்பினர்களையும் அவர்களது நிலைப்பாடுகளையும், அக்கறையையும் ஆய்வு செய்து, ஆராய்ந்து, ஐயப்பாடுகளைத் தீர்த்து மீளமைப்பதற்கு உதவியளிக்கப்பட்டால் மோதுகைகளைக் கடந்துவிடலாம் என அவர்கள் வாதிடுகின்றனர். எனவே புதிய சிந்தனையையும், உறவுமுறையையும் வளர்க்கும்நோக்கில் தரப்பினருடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பணியாற்றும் திறமைமிக்க, ஆயினும் அதிகாரமற்ற மூன்றாம் தரப்பினரின் இடையீட்டையே மோதுகைத்தீர்வு வலியுறுத்துகின்றது. அவர்கள் மோதுகைகளுக்கு உண்மையான காரணம் என்ன என்பதை ஆராய்வதிலும், தரப்பினர்கள் தமது அசையாநிலைப்பாடுகள் தவறவிட்டிருக்கக் கூடிய ஆக்கபூர்வமான தீர்வுகளை இனங்காணுவதிலேயே நாட்டம் காட்டுகின்றனர். அவர்களின் அக்கறை மோதுகைத்தீர்வானது எவ்வாறு மோதுகைகளின் பூஜ்யத்தொகை அழிவு வடிவத்திலிருந்து நேர்க்கணியத்தொகை ஆக்கபூர்வ விளைவுகளுக்கு தரப்பினர் எவ்வாறு நகரலாம் என்பதைப்பற்றியதே ஆகும். “மோதும் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், மோதுகைகளைத் தீர்ப்பதில் பயனுறுதி மிக்கதாயும் தோற்றும் மோதுகை முரண்பாட்டுத்தீர்வு நடைமுறையை” வளர்த்தெடுப்பதே நோக்கமாகும் (அசார் பேர்ட்டன் 1986,1)

சமகால மோதுகைகளில் நிலைமைகளை மீளமைப்பது, வெற்றி - வெற்றி விளைவுகளை அடையாளங் காண்பது ஆகியவற்றுக்கும் மேலான தேவை உள்ளதென மோதுகை மாற்றுநிலையாக்க கோட்பாட்.டாளர்கள் வாதிடுகின்றனர். தரப்பினரின் கட்டமைப்பும், உறவு முறையுமே குறிப்பிட்ட இடத்துக்கு அப்பாலும் பரந்து செல்லும் மோதுகைத் தொடர்புமுறை வடிவத்தில் பதிந்திருக்கலாம். எனவே மோதுகை மாற்றுநிலையாக்கத் தொடர்புமுறைகள், அக்கறைகள், சொல்லாடல்கள் மற்றும் தேவையேற்படின் வன்மையான மோதுகைக்கு ஆதரவளிக்கும் சமுதாய அமைப்பையே மாற்றுவதில் ஈடுபடும் ஒரு நடைமுறையாகும். மாற்றத்துக்கான பிரதான முகவராக அல்லது ஊக்கியாக விளங்குவது ஆக்கபூர்வமான மோதுகையேயாகும். சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நீண்டகால நடைமுறையில் மோதும் தரப்பினரான மக்கள், பாதிப்பிற்குள்ளான சமுதாயம் அல்லது மதம் பொருத்தமான மனிதவளங்களும்

பொருள்வளங்களுமுள்ள வெளியார்கள் ஆகிய அனைவருக்கும் சமபங்குண்டு. இது வெளியாரின் இடையீடின்றி சமூகம் குழுக்களின் ஆதரவை வலியுறுத்தும் அகல்விரிவான பரந்த அளவிலான ஓர் அணுகுமுறையைப் பிரேரிக்கின்றது. அத்துடன், அது தொடரான சிறிய அல்லது பெரிய மாற்றங்களூடாகப் பல்வேறு செயற்படுநர்கள் பிரதான பாத்திரம் வகிக்கக்கூடிய வகையில் மோதுகைகளை படிப்படியாக மாற்றப்படுகின்றன என்பதை அங்கீகரிக்கின்றது. லெடராச்சின் கூற்றுப்படி:

> மோதுகை மாற்று*நிலையாக்கமானது ஒரு குறிப்பிட்ட சூழமைவினுள் மனித கலாசாரவளங்களை உள்ளடக்குவதாகவும், கௌரவிப்பதாகவும், மேம்படுத்துவதாகவும் இருத்தல்வேண்டும். இதற்கு அந்த அமைப்பையும் அதிலுள்ள மக்களையும் "பிரச்சினைகளாகவும்" வெளியாரை "விடையாகவும்"" பார்க்கும் எமது கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்படவேண்டும். மேலும் சரியாகக் கூறுவதாயின், மாற்றத்தின் நீண்டகால இலக்கு அமைப்பிலுள்ள மக்களுக்கும், வளங்களுக்கும் செல்லுபடிநிலை வழங்கி மேலும் கட்டியெழுப்புவதாகவும் நாம் புரிந்து கொண்டுள்ளோம். (லெடெராச் 1995).*

## 2.2 மோதுகைமாற்றுநிலையாக்கக் கொள்கைகளுக்கான பங்களிப்புக்கள்

மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாட்டாளர்கள் தமது எண்ணக் கருக்களைப் பல்வேறுவகையான அமைப்புக்களிலிருந்து பெற்றிருக்கின்றனர். அவற்றுள் சில பழமையானவையாகவும், வேறுசில பிற சிந்தனை முறைகளிலிருந்து இரவல்பெறப்பட்டனவையாகவும் இருக்கலாம். மோதுகை உருவாதல் எண்ணக்கரு ஏற்கனவே மோதுகை உருவாதலை ஆராய்ந்த ஐரோப்பிய கட்டமைப்புக் கோட்பாட்டாளர்களின் பணிமுறைகளில் இருந்துள்ளது (உ-ம் செல்காஸ் 1973, கிரிபென்டோர்ல் 1973). ஆயினும், இற்றைவரையான மிகவும் செல்வாக்கு மிக்க சாதனை உள்மைய எண்ணக்கருக்களின் சிறந்த சாரங்களை வழங்கும் கல்துங்கின் (கல்துங் 1996,70-126 இல் தொகுக்கப்பட்டது) பணியாகும். 85

மோதுகைகள் வாழ்க்கையை உறுதிசெய்யும், வாழ்க்கையை அழிக்கும் அம்சங்கள் இரண்டையுமே கொண்டுள்ளன என்பது அவரது கருத்தாகும். சமூகக்கட்டமைப்பிலுள்ள ஒவ்வாத்தன்மைகள் காரணமாக இவை எழுகின்றன. இவை மனப்பாங்கிலும், நடத்தையிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. உருவாக்கப்பட்டதும் மோதுகைகள் பல்வேறு மாற்றுநிலையாக்கச் செயல்முறைகளுக்கு உட்படுகின்றன: இணைத்தல் அல்லது முறிவு, மனச்சான்றுக்கு கட்டுப்படுதல் அல்லது கட்டுப்படாமை, சிக்கலாக்குதல் அல்லது எளிமையாக்குதல் தீவிரமடைதல் அல்லது தணித்தல் (1996,90). முரண்பாடுகளின் எல்லைகளைக் கடப்பதன்மூலம், விட்டுக்கொடுப்பதால், முரண்பாட்டுக்கட்டமைப்பை ஆழப்படுத்துவதால் அல்லது விரிவாக்குவதால் அத்துடன் செயற்படுநர்களை இணைத்து அல்லது பிரித்துச் செயற்படுதலால் தரப்பிள்ளைகளுக்கிடையிலான ஒத்திசைவின்மையை நீக்கமுடியும் (1996 - 116). கல்துங், கிரிப்பெண்டோர்ப் மற்றும் ஏனையோர் உலக சமுதாயத்தின் கட்டமைப்புடன் உலகப்பொருளாதாரத்திலும் பொதிந்துள்ள பாரிய முரண்பாடுகளுக்கும் ஏனைய முரண்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை வலியுறுத்துகின்றனர்.

கேர்லின் பணி (1971) கல்துங்கின் அணுகுமுறை அடிப்படையில் அமைந்திருந்தது. மனச்சான்றுக்குக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளல்? இணக்கச்பேச்சு, அபிவிருத்தி நடைமுறைமூலம் எய்தப்பெற்ற சமனற்ற தொடர்பிலிருந்து சமநிலையுடைய தொடர்புக்கான நகர்வுமூலம் எவ்வாறு சமச்சீரற்ற தொடர்புகள் மாற்றப்படக் கூடும் என்பதை அவர் கண்டறிந்தார். இக்கைந்நூலுக்கான அவரது பங்களிப்புக்கு கேர்லின் கருதுகோள்களை அடிப்படையாகக்கொண்ட பிரான்சிஸ் போலவே, லெடராச்சும் கேர்லின் கருதுகோள்களையே பின்பற்றினார் அகிம்சைக் கோட்பாட்டாளர்களின் பங்களிப்புகளும் முக்கியமானவையாக உள்ளன (ஷார்ப் 1973,லேர் பேர்கஸ் மற்றும் பேர்கஸ் 1994: கிளார்க் 2000). காணிச்சீர்திருத்தத்தை எதிர்க்கும் குழுக்களைப் போன்ற முரண்பாட்டைத் தாங்கும் தூண்களை அகற்றி

அவர்களைச் சமூக மாற்றீடுகளுக்கு ஆதரவளிப்பதற்குத் திரட்டுவதுமூலம் ஓர் அகிம்சை இயக்கத்தால் முரண்பாடு நிலைமாற்றம் செய்ய முடியும் (இன்டர்நஷனல் அலேர்ட் 1996, 22, 31, 33). சமகால முரண்பாடுகளின் நீடித்ததன்மைக்கு ஒரு விளக்கத்தைத் தருவதன் மூலம் நீடித்த சமூகமுரண்பாடுகள் குறித்த அசாரின் பணி (1990) முரண்பாட்டு நிலைமாற்றத் தத்துவத்தில் முக்கியமான செல்வாக்கைச் செலுத்துகிறது. பலவீனமான அரசுகளின் சமகால முரண்பாடுகளின் இயல்புகளுக்கு மிகவும் பொருத்தமான அணுகுமுறை ஒன்றைப்பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கிறார். அவரது பணி நீடித்த முரண்பாடுகளின் உற்பத்தி, மற்றும் பேணுகை தொடர்பாகக் கவனம்செலுத்துகின்றது. அவரின் இக்கோட்பாட்டை அபிவிருத்திசெய்வதன்மூலம் அதனை முரண்பாட்டு மாற்றக்கோட்பாடு ஒன்றாகவும் பயன்படுத்தலாம்.


உருவப் படம் I நீடித்த சமூக முரண்பாடுகள் தொடர்பான அசாரின் முன்மாதிரி அடிப்படையில் வரையப்பட்டுள்ளது. சில மாற்றங்ககளுடன் அசாரின் மாதிரி உரு இவ் வகையான முரண்பாடுகளின் உருவாக்க நிலைமாற்றம் (அல்லது உருவழித்தல்) ஆகிய இரண்டுக்கும் பயன்படுத்தப்படலாம் என்பதைக் காட்டும் வகையில் அது இங்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

உருவப் படத்தினை அசாரின் நூலில் உள்ளவாறு இடமிருந்து வலமாக வாசிக்கும்போது நீடித்த முரண்பாடு உருவாதலை ஒருவர் கண்டறியலாம் அது வரலாற்றுச் சந்தர்ப்பத்திலிருந்தும், அடிப்படை மனிதத்தேவைகளான அணுகுதல், அடையாளம், பாதுகாப்பு ஆகியவற்றின் மறுப்பிலிருந்தும் அரச, சர்வதேச அரசியல் பொருளாதாரத் தொடர்புகள், படைத்துறை அரசியல் ஆகியவற்றில் வகிக்கப்படும் பங்குகளூடாகவும் எழுகின்றது. அரசும், இனக்குழுக்களும் தமது உத்திகளாக அடக்குமுறையையும் வன்மையான எதிர்ப் புணர்ச்சியையும் கடைப்பிடித்தால், முரண்பாடானது அழிவுக்குரியதாக மாறும்.



படம்மீண்டும் வலமிருந்து இடமாக வாசிக்கும்போது அறிவுபூர்வமான முரண்பாடு அபிவிருத்தி வடிவத்தில் தங்கியுள்ளதாகவும், அதனைச் சுரண்டுவதாகவும், ஆட்சிமுறை திரிபுபட்ட வடிவமாகவும், அரசியல் படைத்துறை வடிவமாகவும் மாறுகிறது. இது மேலும் அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுவதற்கு இட்டுச் செல்கிறது. இதன்விளைவாக நிறுவனமுறையான சீர்குலைவும், அழிவைத்தரும் முரண்பாட்டு வட்டமும் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றன.

மறுபுறத்தில், ஆட்சிமுறைமையிலும் சமூகத்திலும் போதுமான ஆற்றலிருப்பின், அரசியல் மிகவும் இராணுவ மயப்படாவிடில், அத்துடன் சர்வதேச சூழல் ஆதரவளிப்பதாக இருப்பின் அரசாங்கங்கள் விட்டுக் கொடுத்தலையும், ஒத்துப்போதலையும், இனக்குழுக்கள், முரண்பாடுகளின் அரசியல் வடிவங்களையும் தெரிவுசெய்யலாம். இது ஈற்றில் சட்டநிலைத்தகவுள்ள தீர்மானம் எடுக்கும் ஆற்றலை மேம்படுத்தி, தன்னாட்சி அபிவிருத்தியை வலுப்படுத்தி படைத்துறை அரசியலையன்றி சிவில் அரசியலைத் தக்கவைக்கக்கூடியதான ஆக்கபூர்வமான முரண்பாட்டு வடிவத்துக்கு இட்டுச்செல்லலாம். இவை அனைத்தும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உகந்தவையாகும், முன்மாதிரியானது எளிய கட்டமைப்பியலான அல்லது நடத்தை முறையான விளக்கங்களுக்கு அப்பால் சென்று, முரண்பாட்டு வடிவங்கள் எவ்வாறு மனிதத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில், அரசியல் பொருளாதார நிறுவனங்களுடனும், அரசியல் செயற்படுநர்களினால் செய்யப்படும் தெரிவுகளுடனும் இடைத்தாக்கம் புரிகின்றன என்பதைக் காட்டுகின்றது. அத்துடன், எமது வெவ்வேறு விருப்பத் தெரிவுகள் எவ்வாறு கேடுவிளைவிக்கின்ற அல்லது நலன்பயக்கும் முரண்பாட்டு வகைகளுக்கு இட்டுச்செல்கின்றன என்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றது.




உருவம் 01 : நீடித்த சமூக மோதுகை மாற்றுநிலையாக்கம் (ஆதாரம் அசார் - 1990)

ஆற்றல்மிக்க வகையில் மோதுகைகள் எவ்வாறு மாற்றப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதன் அவசியத்தை வலியுறுத்தும் வேரினன், தீர்வு அடிப்படையிலன்றி, மாற்ற அடிப்படையிலான முரண்பாட்டுத் தத்துவமே சிறந்தது என வாதிடுகின்றார்.

> *“மோதுகைக் கோட்பாடுகள் பல பிரச்சினை, செயற்படுநர்கள், அக்கறைகள் ஆகியவற்றை அவை தரப்பட்டவாறே கருதுவதுடன் அதன் அடிப்படையில் அவர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைத் தணிக்கும் பொருட்டுஅல்லது நீக்கும்பொருட்டு தீர்வு ஒன்றினைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன, இருப்பினும், சமூகத்தில் நிலவும், சமூக பொருளாதார, அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக பிரச்சினைகள், செயற்பாட்டாளர்கள், அக்கறைகள் ஆகியன காலத்துக்குக் காலம் மாறுபடுகின்றன.” (வேரினன் 1991,4)*

அவரது அணுகுமுறை, அடிப்படையில் பகுப்பாய்வுசார்ந்ததாகவும், கோட்பாட்டியலானதாகவும் இருப்பினும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவோர். கருத்திலெடுக்கக்கூடிய பலவகையான இடையீடுகளைப்பற்றியும் தெரிவிக்கிறது (வேரினன் 1991 ஐப் பார்க்கவும்)

- செயற்பாட்டாளர் நிலைமாற்றங்கள், தரப்பினரில் உள்ளக மாற்றங்கள் அல்லது புதிய கட்சிகள் உருவாதல்.
- பிரச்சினைகளில் நிலைமாற்றங்கள், மோதுகைப் பிரச்சினைகளின் நிகழ்ச்சி நிரலை மாற்றல்.
- விதிகளில் நிலைமாற்றங்கள், மோதுகைகளை ஆளும் நியமங்கள் அல்லது விதிகளில் மாற்றம்.

- கட்டமைப்பு மாற்றுநிலையாக்கங்கள், மோதுகைகளிலுள்ள உறவுமுறைகளிலும், முழுக் கட்டமைப்பிலும், அதிகாரப் பரவலாக்கத்திலும் மாற்றம். ரூபசிங்க (1995, 1998) பல்சுவட்டு இடையீடுகளைத் தழுவும் அகல்விரிவான, குறுகிய கொள்கைக் கட்டுப்பாடற்றோரின் கருத்துக்களையும் தேர்ந்து ஏற்றுக்கொள்ளும் அணுகுமுறைசார்பாக வாதிடுகின்றார். அடிமட்டத்தில் சமாதானக் குழுமங்களையும், தரப்பினரிடையே சிவில் சமூகமட்டத்திலும் (இருப்பின்) சமாதானக் குழுமங்களை கட்டியெழுப்புவதையும், அத்துடன் வியாபாரக்குழுக்கள், ஊடகம், இராணுவம் போன்ற மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய ஏதாவது குழுக்களிடையேயும் சமாதானக்கூட்டணிகளை ஏற்படுத்துவதுபற்றியும் கருத்துத்தெரிவிக்கின்றார். அவர் மோதுகை மாற்றுநிலையாக்கத்தையும், மோதுகைத் தீர்வுப் பயிற்சியையும் இராஜதந்திர இடையீடுகள், சமாதானம் காத்தல் உட்பட்ட சுவடு 1 இடையீடுகளையும் கூட்டிணைக்கும் விரிவான அணுகுமுறையாகக் காண்கின்றார்.

லெடெராச்சின் பணி (1997) மோதுகை மாற்றுநிலையாக்கச் சிந்தனையாளர்களின் மிகவும் விரிவான கூற்றுகளில் ஒன்றாக இற்றைவரை இருந்துவருகிறது. அவர் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை சமாதானம், நீதி நேர்மை, கருணை ஆகியவற்றுக்கான வேட்கையால் உந்தப்பட்டு நீண்டகால யுத்த முறைமையைச் சமாதான முறைமையாக மாற்றும் ஒன்றாகக் கருதுகின்றார்.

இந்நடைமுறையின் பிரதான அம்சங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில் (குறுகிய, நடுத்தர, நீண்டகால) உருவாக்கப்பட்டு, பல்வேறு காலங்களில் வெவ்வேறு முறைமை மட்டங்களைப் பாதிக்கும் மோதுகைகளின் சொந்த, கட்டமைப்பியலான தொடர்புடைய, கலாசார அம்சங்களில் ஏற்பட்ட மாற்றங்களாகும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் இவ்வாறான ஒரு கட்டமைப்பியலான நடைமுறையாகக் காணப்படுகிறது. பொருத்தமான உத்தி ஒன்று (மத்தியமட்டத் தலைவர்களுக்கும், மோதும் தரப்பினருக்குமிடையிலான வலையமைப்புப்போன்ற) பொருத்தமான நேரக் கட்டுக்கோப்புடன் (சமாதானக் குழுமம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான மத்தியகால நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் அதேவேளை, எதிர்நோக்கும் எதிர்காலத்தைப் பற்றிய தொலைநோக்குகளையும் தற்போதைய சிக்கலான நிலைபற்றிய விழிப்புணர்வையும் தழுவுதல் போன்று) தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. கட்டமைப்பைப்பற்றி சிந்திக்கும்போது லெடராச் உயர் குடியினரையும், தீர்மானம் எடுப்போரையும் உச்சத்திலும், சமூக அமைப்புகள், ஆலயங்கள் மற்றும் உயர்தர, பத்திரிகையாளர்களை மத்தியமட்டத்திலும், சமுதாயத் தலைவர்களை அடிமட்டத்திலும் கொண்ட கூம்பகமொன்றைப் பரிந்துரைக்கின்றார். ஓர் அகல்விரிவான சமாதான நடைமுறையானது இவ்வனைத்து மட்டங்களிலுமுள்ள முழுநிறைவாக்கும் மாற்றங்களையும் கருத்திலெடுக்கவேண்டும்.



இந்த முன் மாதிரியின் வலுவொன்று என்னவெனில் அது தனது கண்ணோட்டத்தை மோதுகைகளிலிருந்து மோதும் தரப்பினருக்கு விஸ்தரிப்பதுடன், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான வளங்களைப் பரந்த சமூகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் குறியிலக்கையும் சுட்டிக்காட்டுவதாகும். மோதுகையால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் அரசியல் முறைமையின் தன்னாட்சி நடைமுறை மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கவனத்தைச் செலுத்துவது ஒரு வலுக்குறைவாகும்.

மோதுகை இடையீட்டுச் சூழமைவில் லெடராச்சினால் எழுப்பப்பட்டு மோதுகைத் தீர்வு சிந்தனையாளர்களால் பரந்த அளவில் விவாதிக்கப்படும் பிரச்சினையானது, தொடர்நிகழ்வு நிலைப்படுத்தல் பிரச்சினையாகும். எந்த வகையான நடவடிக்கை அல்லது இடையீடு பொருத்தமானது யாரால், எப்போது எடுக்கப்பட வேண்டும்?. கிளாஸில் (1982) மோதுகைகள் அதிகரிக்கும் ஒன்பது படிநிலைகளைப்பற்றிக் கூறியுள்ளார். அவர் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு வகையான இடையீடுகள் பொருத்தமாகுமென வாதிடுகின்றார். பி'ர், கீ'லியின் (1891) எதிர்பாரா நிகழ்வுக் கோட்பாடு இதனடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இடையீடுகளின் இயல்பு மோதுகைப் படிநிலைக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டுமென்பது அவர்களது கருத்தாகும். மோதுகைகளின் ஆரம்பகாலத்தில் இலகுபடுத்தல் அனுசரணை

பொருத்தமானது. ஆனால் மோதுகை ஒன்று அதி உச்சநிலைக்கு முனைப்படுத்தப்படும்போது அதிகார அடிப்படையிலான இடையீடுகள் (அல்லது பலவந்தம், வற்புறுத்தல்கூட) தேவைப்படும். லெடராச் (1997), கேர்லின் (1971) மோதுகை முன்னேற்ற அடிப்படையிலான வற்புறுத்தலைத் தவிர்க்கும் மற்றுமொரு எதிர்பாரா நிகழ்வு மாதிரியை வெளிப்படுத்துகின்றார்.

மோதுகை மாற்றுநிலையாக்க பாரம்பரியத்தினுள் உள்ள எழுத்தாளர்கள் மூவகை சிந்தனையாளர்களும் பொதுவான மோதுகை அசைவியக்கம் தொடர்பான சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். உதாரணமாக, மோதுகைகள் சிலவேளைகளில் தீவிர அல்லது தணிவான சூழலுக்கு இட்டுச்செல்லக் கூடிய வன்மையான போக்குடையவையாகும். பொதுவாக, முரண்பாடுகள் விரிவடைகின்றன, (புதிய பிரச்சினைகளை உள்வாங்கல்), பரந்து படுகின்றன (புதிய செயற்பாடுகளை உள்வாங்கல்) அத்துடன் திவீரமாக்கப்படுகின்றன (புதிய பாதிப்புற்றோரை உள்வாங்கல்), ஆயினும், புதிய தரப்பினர் நிலைமாறுவதாலும், புதிய இலக்குகளைப் பின்பற்றுவதாலும், புதிய செயற்படுநர்கள் தோன்றுவதாலும், புதிய தொடர்புகள் மற்றும் மாற்றப்பட்ட கட்டமைப்புக்கள் தோன்றுவதாலும் மோதுகைகள் மாற்றமடையக்கூடும்.

மோதுகை மாற்றுநிலையாக்க கோட்பாட்டின் அணுகுமுறைகள்தொடர்பான இச்சுருக்கமான மீளாய்விலிருந்து அசார், வேரினன் ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்டிருக்கும் சில கோட்பாடுகள் சமகால மோதுகைகளின் உருவாக்கத்தையும், மாற்றுநிலையாக்கத்தையும் அடிப்படையில் பகுப்பாய்வு பூர்வமானதாகவும், விளக்க விளைவானதாகவும் எடுத்துரைக்கமுயலுகின்றன. கேர்ல், லெடராச் ஆகிய பிறரின் கருத்துக்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவோருக்கு மோதுகையிலிருந்து விரும்பிய விளைவுக்கு இட்டுச்செல்லும் வழியைக்காட்டும்வகையில் விதிமுறைக் கட்டுப்பாட்டுக்குரியனவாயுள்ளன. கல்துங்கின் அணுகுமுறை ஒரு கூட்டிணைப்பை மிக நெருங்கிவருகிறது எனலாம்.



## 2.3 மோதுகை கோட்பாட்டிலிருந்து சூழமைவிலான மோதுகைக் கோட்பாட்டுக்கு

சமாதானம் உருகாக்கலுக்கான செல்முறையானது மோதுகைகளைத் தவிர்த்தலிலிருந்து மோதுகைக்குப் பிந்திய சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளமையாலும், உலகமயமாக்கலின் காரணமாக உள்நாட்டு மோதுகைகள் மீது அதிகரித்த தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றமையாலும் மோதுகை மாற்றுநிலையாக்க் கோட்பாடுகளின் நோக்கெல்லையும் அதற்கு நிகராக விஸ்தரிக்கப்படவேண்டும். மறுபுறமாக, அவை பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மோதுகைகளை தூண்டிவிடும் காரணிகளைப் பற்றியும், கட்டுப்படுத்தும் காரணிகளைப் பற்றியும் கவனம்செலுத்தவேண்டும் (பெட்டி ஒன்றைக் காண்க).

பெட்டி 1 : பல்வேறு சந்தர்ப்பங்களில் மோதுகையை மிகைப்படுத்தும் மற்றும் மட்டுப்பத்தும் காரணிகள்

| கட்டம் / காரணி | முன் வன்முறை | இடர் | உக்கிரமடைதல் | நீடித்தல் | பின் தீர்மானம் |
|---|---|---|---|---|---|
| மிகைப் படுத்தல் | ஏதுவான காரணிகள் | ஆரம்பிப்பாளர் | உக்கிரமாக்கும் காரணி | உருக்குழைந்த | ஆரம்பிப்பாளர் |
| மட்டுப் படுத்தல் | ஆழமாக தடுத்தல் | சரளமாக தடுத்தல் | உக்கிரமடையாத காரணி | மாற்றும் சாதனம் | சமாதானத்தை கட்டியெழுப்புவோர் |

மறுபுறத்தில், இத்தத்துவங்கள் சர்வதேச முறைமையின் அனைத்து வேறுபட்ட மட்டங்களினதும் காரணகர்த்தாக்களினதும், தடுப்பாளர்களினதும் இடைவிளைவுகளை போதுமான அளவு கையாளுபவையாக இருத்தல்வேண்டும். சமகால மோதுகைகள்கள் உருவாக்கப்படும் ஐந்து வேறுபட்ட மட்டங்களை ஒருவரால் இனங்காணமுடியும். உலகளாவிய, பிராந்தியரீதியான, சமூக, மோதுகைத் தரப்பினர், மற்றும் தனி நபர் உயர் குடியினர்(மியால், ரம்ஸ்பொதாம், வுட்ஹவுஸ் 1999) பெட்டி 2. ருவண்டாவின் உதாரணங்களைப் பயன்படுத்தி இந்த மட்டங்களில் வன்மையான மோதுகைக்கான காரணங்களினதும், தடுப்பாளர்களினதும் குறிப்பிட்ட உதாரணங்களைத் தருகிறது.

பெட்டி 2 வெவ்வேறு மட்டங்களில் வன்மையான மோதுகைளுக்கான காரணங்களும், தடுப்போரும்.

| மட்டம் | காரணிகளுடன் உதாரணம் | தடுப்பது தொடர்பான உதாரணங்கள் |
|---|---|---|
| உலக | பின் காலணித்துவ பரம்பரை சொத்து | சர்வதேச சிறுபான்மையினரின் உரிமைகள் |
| பிராந்திய | பாரிய பிரதேசத்திற்கு மோதுகை விரிவடைதல் | OSCE அமைப்பின் மூலமாகச மோதுகையை தடுத்தல். |
| அரசாங்க / சமூக | இனக்குழும குழுக்கள் அரசை கைப்பற்றல் | இனவர்க்க கட்சிகளுக்கிடையில் தேர்தல் |
| மோதுகை தரப்பினர் | டுட்ஸி இனத்தவரகளுக்கெதிரான ஹீற்று எதிர்ப்பு நடவடிக்கை | சிறுபான்மையினர் நடைமுறையில் வரக்கூடிய அணுகுமுறை |
| மேல் மட்டத்தினர்/ சர்வதேச | ஹீற்று தலைவர்களை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளல் | ஜனாதிபதி OSCE ஆலோசணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. |




மோதுகைக் கோட்பாடுகளை மிகவும் குறுகிய முறையில் நோக்கில் அவை மோதுகைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களையோ, மோதுகைகளுக்குச் சுயமாகத் தூபமிடும் காரணிகளைப்பற்றியோ (உ-ம் சந்தைகள், வன்முறைபண்பாடு) கருதாது மிக அதிகமாக மோதும் தரப்பினர் மட்டத்தில் தரப்பினர், பிரச்சினைகள் இலக்குகள் போன்றவற்றிற்கு கூடுதல் கவனம்செலுத்துவது புலனாகும். எவ்வாறாயினும், பின்னணியை மேலும் விளக்கமுடியும். உதாரணமாக, கல்துங்கின் மோதுகைகளின் எளிய முக்கோண உருவாக்கலில் "மோதுகையை" "சூழமைவாகவும்", "மனப்பாங்குகளை'', ''நினைவுகளாகவும்'', "நடத்தைகளை", "தொடர்புகளாகவும்", "உரு", கட்டியெழுப்ப முடியும் (2 ஐப்பார்க்கவும்). இது மோதுகையின் அர்த்தம் பெருமளவில் மோதுகை எழும் சந்தர்ப்பத்தை அடிப்படையாக் கொண்டது என்பதை அங்கீகரிக்கிறது. ஒரு தரப்பினர் மீது மற்றையவரின் உளப்பாங்கு முன்னைய உறவுகளால் வடிவமைக்கப்படும். அவர்களது நடத்தை முற்றிலும் எதிர்த்தாக்கமுடையதல்ல. ஆயினும் கடந்தகாலத்தில் நடந்தவைபற்றிய நினைவுகளிலும், எதிர்காலத்தில் நடக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுபவையிலுமே அடிப்படையாகத் தங்கியுள்ளது. மோதுகைக்கான சூழமைவு மோதும் சமுதாயத்தினரையும், பரந்த சர்வதேச, பிராந்திய மட்டத்தினரையும் உள்ளடக்கும். சமூகச்சூழலில் பிரதானமான பின்னணியாக இருப்பவை பண்பாட்டு ஆட்சிமுறை ஒழுங்குகள், நிறுவனங்கள் சமூகப்பங்கு, நியமங்கள் ஒரு சமுதாயத்திலுள்ள விதிகள், ஒழுக்க முறைகள், அதன் அபிவிருத்திப் பாதை ஆகியவையாகும். உதாரணமாக, இனக்குழுமம், சிறுபான்மையினர் அல்லது அரச கட்டமைப்புக்கு சவால்கள் தொடர்பான மோதுகைகளில் பிரதான பிரச்சினையாக இருப்பது அரச கட்டமைப்பேயாகும். உலகமயமாக்கலுடன்

உள்ளூர் மோதுகைகள் தவிர்க்கமுடியாதவாறு பரந்த பொருளதாதர அரசியல் சக்திகளின் செல்வாக்குக்கு உட்படுத்தப்படுகின்றன. இவை உலகின் சில பிரதேசங்களில் வர்த்தக முதலீட்டையும், தொழில் நுட்பவலையமைப்பையும் வலுப்படுத்தும் போக்கினையும், ஆபிரிக்கா, முன்னைய சோவியத் யூனியன் போன்ற பிறபிரதேசங்களை ஓரங்கட்டும் போக்கினையும் கொண்டுள்ளன. இதன் விளைவாக, இப்பிரதேசங்களில் அரசும், பொருளாதாரமும் நலிவடைவதுடன், சில சந்தர்ப்பங்களில் அரசுக்கு உண்மையான சிக்கல் நிலையை உருவாக்குகின்றது. உள்நாட்டு மோதுகைகள் வலுவற்ற அரசுகள், உலகமயமாக்கலின் தாக்கத்துக்கு ஏற்ப எதிர்த்தாக்கங்களை காட்ட இயலாமை ஆகியவற்றுடன் தொடர்புற்றவையாகும்.

தொடர்புகள் என்பது மோதுகைகள் ஏற்படும் சமூகங்களிலும் அதற்கு மிகவும் அப்பால் பிற சமூகங்களிலும் உள்ள இடைத்தாக்கங்கள் சம்பந்தப்பட்டவை. லெடராச் (1997) வாதிடுவதுடபோல் மோதுகைகளின் இந்த அம்சம் பிரதானமானது. குழுக்களுக்கிடையிலுள்ள மோசமான தொடர்புகள் அநேகமான மோதுகைகளைத் தூண்டுபவையாக இருப்பதுடன், வன்செயல் முடிவடைந்தபின்னரும் சமாதானத்தைக் கட்டியெழுப்பவதில் இவை பிரதான தடையாகவுள்ளன.

உருவப்படம் 2 மோதுகை முக்கோணத்தை விரிவாக்கல் வெவ்வேறு முறைமை மட்டங்களில் மோதுகைகளை மாற்றியமைப்போரும், தூண்டுவோரும்.

உருவம் 2 : மோதுகை முக்கோணத்தை விரிவு படுத்தல்
பல்வேறு முறை மட்டங்களில் மோதுகை மாற்று நிலைப்படுத்தல் காரணி மற்றும் நெம்புகோல்



நினைவுகள் என்பவை நிலைமை தொடர்பான ஒவ்வொரு தரப்பினரதும் சமூக நிர்மான விளக்கம் கலாசாரம், கல்வியறிவு, சொல்லாடல், நம்பிக்கை ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட புரிந்துணர்வின் ஒரு பகுதியாகும். எவ்வாறு குழுக்கள் அவர்களது கடந்தகாலத்தை நினைவில் நிறுத்தி உருவாக்குகிறார்கள் என்பது மோதுகைகளை நிலைப்படுத்துவதில் முக்கியமாக இருப்பதுடன், இணக்கப்பாட்டையும், கலாசார பாரம்பரிய பணிகளையும் நிறைவேற்றுவதற்கு பிரதானமாக உள்ளது காலம், நேரம் என்ற பரந்த பின்னணியில் சூழமைவு, தொடர்புகள், நினைவுகள் யாவும் முரண்பாடு உருவாதலுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒவ்வாமைகள், மனப்பாங்கு, நடத்தை ஆகியவற்றின் ஒரு பகுதியாகும்.

இந்த அமைப்பு நிகழ்கின்ற மாற்றத்தின் வகைகள்பற்றிய சிறந்த புரிந்துணர்வை எமக்கு அளிக்கின்றது. வேரினனின் அணுகுமுறையின் அடிப்படையில் பெட்டி 3 ஐந்து வகையான மாற்றுநிலையாக்கங்களை அல்லது மாற்றுவோரை விளக்குகின்றது.

சூழமைவு மாற்றுநிலையாக்கங்கள் என்பது மோதுகை நிலைமைதொடர்பாக ஒவ்வொரு தரப்பினரதும் கண்ணோட்டத்திலும் அத்துடன் அவர்களது நோக்கங்களிலும் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் குறிக்கின்றது. பிரதேச முரண்பாடுகள்மீதான பனிப்போர் முடிவின் தாக்கம் குறிப்பிடத்தக்க உதாரணமாகும். சியராலியோனிலும், அங்கோலாவிலுமுள்ள மோதுகைகளலை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய "மோதுகை வைரங்களை" பலவீனப்படுத்தக்கூடியவகையில் வைரவியாபார விதிகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் நீண்டதூரம் செல்லமுடியாதவையாகும். உலக வைரமன்றம் ஒன்றினை தாபிப்பது (றறற.றழசடனனயைஅநனெஉழரஉெடை.உழஅ) ஒரு நம்பிக்கையூட்டும் ஆரம்பமாக இருப்பினும், அதனால் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுமா என்பதை இப்போதே கூறுவதற்கு முடியாது.

கட்டமைப்பு மாற்றுநிலையாக்கமானது மோதுகைகளின் அடிப்படைக் கட்டமைப்பில் அதாவது செயற்பாட்டாளர்கள், அவர்களது பிரச்சினைகள், ஒத்திசைவற்ற இலக்குகளும், தொடர்புகளும் அல்லது மோதுகை நிலவும் சமூகம் பொருளாதாரம் மற்றும் அரசு என்பவற்றைக் குறிப்பதாகும். மூல உறவுகளை மாற்றாமல் சமச்சீரற்ற மோதுகைகளை மாற்ற முடியாது. அத்தகைய மாற்றங்கள் படிப்படியாக நிகழும் வேளையில் உள்ளக வெளிப்புறச் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் அவர்களது ஆதரவை வழங்கலாம். உதாரணமாக, ஸ்டீவ் பிக்கோவின் "கறுப்பின உணர்வு" இயக்கமானது தென் ஆபிரிக்க குடியிருப்பகளில் வாழும் ஏழை மக்களின் அதிகாரம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளதுடன், இன ஒதுக்கீடு எதிர்ப்பு இயக்கமானது இன ஒதுக்கீட்டு ஆட்சி முடிவுக்கு வருவதற்கு மிக முன்னரே வெளிநாட்டாருக்குச் சொந்தமான வியாபாரங்களில் முதல் செய்யாமலிருப்பதுதொடர்பான விடயத்தில் அழுத்தம்காட்டுவதற்கு உதவியது. தென் ஆபிரிக்காவின் அண்மைக்கால மோதுகைகள் பல யுத்தத்துக்குத் தூபமிடும் பொருளாதார நலனில் அக்கறை செலுத்தாது மோதுகை மாற்றுநிலையாக்கத்தைக் கொண்டுவரமுயல்வது பயனற்றது என்பதைக்காட்டியுள்ளது.



செயற்பாட்டாளர்களின் மாற்றுநிலையாக்கமானது பங்கேற்போர்கள் தமது இலக்குகளை மாற்றுவதற்கு அல்லது மோதுகை தொடர்பான அவர்களது பொதுவான அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் எடுக்கும் தீர்மானங்களை உள்ளடக்கும் இது சமாதானத்தை நாடும் அல்லது சமாதான நடைமுறையை ஆரம்பிக்கும் தீர்மானங்களை உள்ளடக்கும் அத்துடன் அவை மோதுகைகளில் நிலை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கியமானதாயிருக்கும் தலைமைத்துவத்தில் மாற்றத்தையும் உட்படுத்தும். அத்துடன், அதில் மக்கள் தொகுதிகளின் அமைவு அந்தந்த அரசியல் தலைவர்களின் ஆதரவாளர்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை அடங்கும். இது ஒரு கட்சியினுள்ளிருந்துகொண்டு அக்கட்சியின் நிலையில் மாற்றத்தைக் கொண்டுவருவோர் பெரும்பாலும் சமாதான நடைமுறையில் பிரதான செயற்படுத்துநராகவும், தடம் ! தடம் !! செயற்படுநர்களான வெளியாரைக்காட்டிலும் செல்வாக்கு உடையவர்களாயுமிருக்கலாம் என்பதால் இது குறிப்பான மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான பல வழிமுறைகளுக்கு வழிவகுக்கிறது.

*பிரச்சினைகளில் மாற்றுநிலையாக்க மோதுகைகளின்* மத்தியில் பிரதானவிடயங்களில் கட்சியினரது நிலைப்பாட்டை மீளுருவாக்குதல் தொடர்பானதாகவும், ஒத்திசைவு அல்லது தீர்வு ஒன்றுக்கு வருமுகமாக அந்நிலைப்பாடுகளை கட்சிகள் எவ்வாறு மீள்வரையறை செய்கின்றனர் அல்லது மீளமைக்கின்றனர் என்பது தொடர்பானதாகவும் உள்ளது. வட அயர்லாந்து யூனியனிஸ்ட் கட்சி படைக்களைப்புப் பிரச்சினையை விட அயர்லாந்து பேரவை ஆரம்பம் குறித்த பிரச்சினையிலிருந்து பிரித்து வைப்பதற்கு எடுத்த முடிவு இதற்குச் சிறந்த உதாரணமாகும். மோதுகை தொடர்பான பிரச்சினைகளில் ''முன்னேற்றம்'' காண்பது மிகவும் மெதுவாகவும், வருந்தத்தக்கவிதத்தில் திருப்பங்களுக்கு உட்படுவையாக இருப்பதுடன் முன்னேற்றம் எனக் கருதப்படுவதே நிச்சயமாக சர்ச்சைக்குரியதாக உள்ளது.

**பெட்டி.3 : மோதுகையை மாற்றுநிலைப்படுத்துவோர்**

| வகை | உதாரணம் |
|---|---|
| 1. சூழமைவு மாற்றுநிலையாக்கங்கள் | சர்வதேச அல்லது பிராந்திய சுற்றாடலில் மாற்றங்கள் |
| 2. கட்டமைப்பு மாற்றுநிலையாக்கங்கள் | சமச்சீரற்ற தொடர்புகளின் சமச்சீர் தொடர்புகளுக்கு மாற்றங்கள் / ஆட்சி கட்டமைப்புகளில் மாற்றங்கள் / வன்முறை தொடர்பான சந்தைகளில் மாற்றங்கள் |
| 3. நடவடிக்கை மாற்றுநிலையாக்கங்கள் | தலைமைத்துவத்தின் மாற்றம் / நோக்கங்களில் மாற்றங்கள் / தரப்பினர்களுக்கிடையிலான மாற்றங்கள் / தரப்பினர்களின் சமஸ்தானங்களின் மாற்றம் / செயற்பாட்டாளர்களை மாற்றல் |
| 4. உள்ளடக்கப்பட்ட விடயங்களில் மாற்றுநிலையாக்கங்கள் | கருத்து வேறுபாடிற்கு உள்ளாகும் விடயங்களுக்கு புறம்பாக செல்லல் / சாதகமான தீர்வு / அடிப்படை விடயங்களை தடுத்தல் அல்லது தொடுத்தல் |
| 5. மேல்மட்டத்தினர் / பிரபு மாற்றுநிலையாக்கங்கள் | தோற்றம் மாற்றமடைதல் / வேறு நிலையை எடுத்தல் / மனவுறுதியில் மாற்றம் சமாதானப்படுத்தலுக்கான சமிங்ஞை |

நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரமுள்ள தனிநபரான தலைவர்கள் அல்லது சிறுகுழுக்களின் இதயத்தில் அல்லது உள்ளத்தில் ஏற்படும் தனிப்பட்ட மாற்றங்கள் மிகவும் முக்கியமானவையாக இருக்கலாம். சில வெளியக இடையீட்டாளர்கள் இத்தலைவர்களை அணுகி இந்தத் தனிப்பட்ட மாற்றத்தை நேரடியாக ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கலாம் (கேர்ல் 1987 மிஷெல் 2000). இச் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட மாற்றங்களை வெளிப்படுத்தும் தலைவர்களின் இணக்கப்பாடான சைகைகள் முக்கிய பங்கை வகிக்கலாம்.

இவ்வைந்து வகையான மாற்றுநிலையாக்கங்களுக்கு மேலே இனங்காணப்பட்ட மோதுகைகள் உருவாதல் அல்லது தடுத்தல் மட்டங்களுடன் உடனடியாகத் தொடர்புடையவையாக இருக்கலாம். பிரச்சினை மாற்றுநிலையாக்கங்கள் வழமையாக அரச, சமூக மட்டத்தில் ஏற்படுபவை. செயற்பாட்டாளர் பிச்சினை மாற்றுநிலையாக்கங்கள் ஆகியவை மோதுகைத்தரப்புடன், அத்துடன் மேல்மட்டத்தில் எழுபவையாகும். தனிப்பட்ட நிலைமாற்றங்கள் தனிநபர்மட்டத்தின் திறனைத் தேவைப்படுத்துபவையாகும்.

மாற்றுநிலையாக்க வகைகள் அசாரின் நியதிப்படியானதாக (படம் 1 ஐப்பார்க்க) அல்லது கல்துங்கின் (படம் 2ஐப் பார்க்க) சூழமைவில் காணப்படுவதாக இடருப்பினும், மோதுகை உருவாக்கத்தை பல்வேறு பகுதிகளுடன் தொடர்புபடுத்த முடியும் மோதகைகளின் பிரதான சூழமைவு, கட்டமைப்பு, பிரச்சினை மாற்றுநிலையாக்கங்கள் அனத்தும் சந்தர்ப்பங்களையும், மோதுகைகளையும் மையத்தில்

பாதிக்கின்றன. செயற்பாட்டாளர் தனிப்பட்ட மாற்றுநிலையாக்கங்கள் ஆகியவை குறிப்பாக மனப்பாங்கு, நினைவு நடத்தை தொடர்பு முறைகளைப் பாதிக்கின்றன. நிச்சயமாக இவை முறையே ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றுள்ளன.

இறுதியாக இவ்வேறுபட்ட மாற்றுநிலையாக்கங்கள் அனைத்தும் மோதுகைகளின் கட்டங்களுடனும், இடையீடுகளின் நேரக்கணிப்புடனும் மேலும் தொர்புற்றுள்ளன. சூழமைவான மாற்றங்களும், கட்டமைப்பு மாற்றங்களும் நீண்டகால அவகாசத்தில் நடைபெறுவதுடன் மோதுகைகளின் அமைப்பையும் பாதிக்கின்றன. பிறவகையான மாற்றுநிலையாக்கங்கள் மோதுகைகளின் இயக்கவியலின் ஒரு பகுதியாகத் துரிதமாகவும், வரிசைக்கிரமமாகவும் நிகழ்கின்றன. மாற்றங்களைத் தொடராய் அமைத்தல் நிலைமையின் நியாயப்படி ஒவ்வாரு சமாதான நடைமுறையுடனும் வேறுபடும் (வட அயர்லாந்து விடயம் தொர்பாக பெட்டி 4 ஐப் பார்க்கவும்). மிக எளிய மோதுகைகளில் மட்டுமே மோதுகைமாற்றம் விரைவான அல்லது உடனடி நடவடிக்கையாக இருக்கும். இதன் காரணமாக தனிப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவது மிகவும் கடினமாகும்.

பெட்டி 4 வடஅயர்லாந்து மோதுகைகளில் மாற்றுநிலையாக்கம் ஏற்படுத்தியோர்

மிகவும் தீவிரமாகக் கையாளப்பட்ட மோதுகைகளுள் ஒன்றாகவும் இருபதாம் நூற்றாண்டின் மிகவும் கடினமான மோதுகைகளில் ஒன்றாகவும் வட அயர்லாந்து மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் பல படிப்பினைகளை அளித்துள்ளது. இதன் வெவ்வேறு நிலைகளில் மாற்றுநிலையாக்கத்தின் ஐந்து மட்டங்களுக்குமான சான்றுகளை நாம் காணலாம். மோதகைகளுக்கான சூழமைவு பிரித்தானிய ஐரிஷ் சமூகங்களின் நீண்டகால மாற்றங்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி, பனிப்போர் முடிவு ஆகியவற்றால் மாற்றப்பட்டது. தீவிர தேசியவாத கட்சியினரிடையே இதற்குமுன்பிருந்த சமச்சீரற்ற தொடர்பினைச் சமப்படுத்துவதற்குப் போதுமான உறவினையும், நம்பிக்கையையும் அபிவிருத்தி செய்தபின்னர், மோதுகைக் கட்டமைப்பானது மாற்றமடைந்தது. செயறபாட்டாளர் மாற்றுநிலையாக்கங்கள், பிரித்தானிய அரசாங்கத்தில் மாற்றம், சின் பெயின் தலைமைத்துவத்தின் சிந்தனையில் அடிப்படை நகர்வு 'யூனியனிஸ்ட்'' இடையே பிரிவும், மாற்றமும் அடங்கலான பிரச்சினை மாற்றுநிலையாக்கமானது பெரிய வெள்ளி ஒப்பந்தத்தில் இரு கலாசார பாரம்பரியங்களினதும் நியாயத்தை, ஒத்திசைவாக்கி ஐரிஷ் பிரித்தானிய ஆட்சிமுறைப் பரிமாணங்களை வலுப்படுத்தும் நிறுவனங்களை தாபிப்பதை உள்ளடக்கும். இவை அனைத்தும் தனிப்பட்ட மட்டத்திலும் உயர்குடியினர் மட்டத்திலும் மனதில் குறிப்பிடத்தக்க மாற்றங்களில்லாமல் நிகழ்ந்திருக்கமுடியாது. இருந்தபோதும், ஒவ்வொரு பருவமும் பிரிவு, பயம் என்ற சூழலை மீண்டும் ஏற்படுத்தும் போது மோதுகைகள் நிலைத்துத் தொடர்கின்றன. வட அயர்லாந்து வெவ்வேறு சுவடுகளில முழுநிறைவாக்கும் அனுகுமுறைக் கட்டமைப்பு கலாசார அணுகுகைகள்மீது குறிப்பிடத்தக்க உதாரணமாகும் (புளூம்பீல்ட் 1997). உதாரணமாக, அடிப்படையில் சமுதாயத் தொடர்புகள் மன்றத்தின் அமைதியான பணிகள் இளம் அரசியல்வாதிகளிடையே அமைதியான உரையாடலுக்கு வசதிசெய்து கொடுக்குமுகமாக போதுமான நம்பகத்தன்மையை உருவாக்கியுள்ளன (பிட்ஸ்டல் 1999). இந்த சமாதானநடைமுயிலும், அத்துடன் சமுதாயங்களுக்கிடையிலான நீண்டகால நடைமுறையிலும் ''சிவில் சமூகத்தின்'' பங்கினைப்பற்றி நாம் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை. கொச்ரேன் மற்றும் டன் (2002) ஆழமான மதிப்பீடு ஒன்றை வழங்குகின்றது.

மோதுகைகள் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்க இயக்கவியல் ஆகியன மோதுகைகளைக் கையாளும் சமூக மற்றும் சர்வதேச இயலுமையுடனும் தொடர்புற்றது. பொதுவாக, நியாயமான விதிகளும், நியமங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களுள்ள, மாற்றங்களை அமைதியானமுறையில் கையாளும் சமூகங்களில் இத்தேர்ச்சியானது உயர்வாக இருக்கக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது. இவ்வாறே, தீவிரமான மோதுகை யுத்த காலத்தில் அச்சுறுத்தப்படலாம் அல்லது அடியில் தள்ளப்படலாம். அசாரின் படம் 1ல் காட்டப்பட்டுள்ள அசாரின் கோட்பாட்டின் திருத்தப்பட்ட உரை பிரிவுபட்ட சமூகங்களில் மோதுகை இயக்கவியலுக்கும், மோதுகை கையாளலுக்குமிடையே காணப்படும் தொடர்பைக்காட்டுகின்றது.

ஆக்கபூர்வமான மோதுகைக் கையாளல், அதன் சமூகநிறுவனங்கள் மோதுகைகளைச் சமாதானமாக கையாளும் இயலுமை மற்றும் கலாசாரம் ஆகியவற்றில் சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது. மேலும், அது மோதுகைகளின் தொடர்புகளை மாற்றுவதோடு மட்டுமல்லாது, சமூகத்தின் ஆட்சிமுறையையும் மோதுகைகளைக் கையாளும் தேர்ச்சியையும், சமாதானமான மாற்றத்தையும் வலுப்படுத்துகின்றது.

மறுபுறத்தில் அழிவைக் கொணரும் மோதுகை, மோதுகைகளில் பங்கேற்போரினதும், ஏனையோரினதும் சேதங்கள் தீவிரமடைவதை விளைவுறுத்தும். மேலும், அவர்களது ஆட்சிமுறை உட்பட ஒத்துழைக்கும் திறன், பொருளாதார ஒழுங்கு, சமூகத்தின் அனைத்து அமைப்புகளும் முற்றாக சீர்குலைவடைகின்றது.

இந்த விரிவான கோட்பாட்டியல் சிந்தனைகள் மோதுகை மாற்றுநிலையாக்க நடைமுறைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்யும் ஒரு கட்டுக்கோப்பைப் பரிந்துரை செய்வதுடன், மோதுகைகளைக் கையாளுவதில் சர்வதேச இயலுமையின் இடைவெளிகளையும், நலிவுகளையும் கவனத்திலெடுக்கின்றன.



# 3. மோதுகைத் தீர்வு நடைமுறைகள்

## 3.1 மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் செயற்பாட்டாளர்கள்

வழமையாக, மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் பல்வேறு நடைமுறைகளைப் பயன்படுத்தும் பல செயற்பாட்டாளர்கள் ஈடுபடுவர். இவர்களைச் சமகால நடைமுறைகளின் அபிவிருத்தியை வடிவமைக்கும் நான்கு பிரதான குழுக்களாக வகைப்பிரிவுபடுத்தலாம்.

- அரசுகளும், அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புகளும்
- அபிவிருத்தி மற்றும் மனிதநேய அமைப்புகள்.
- மோதுகைத் தடுப்பு மற்றும் நிலைமாற்றம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள்.
- பாதிக்கப்பட்ட சமூகங்களிலுள்ள மோதுகைத் தரப்பினரும், சம்பந்தப்பட்ட பிற குழுக்களும்.

இவை ஒன்றுகூடும்போது எழும் பிரச்சினைகளைப்பற்றிப் பரிசீலிக்கமுன்னர் ஒவ்வொரு குழுவினதும் தனித்துவமான நடைமுறைகள் சிலவற்றை மிகவும் சுருக்கமாக ஆராயவிழைகின்ற தடம் 1 இன் செயற்பாட்டாளர்கள், அரச, அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புகள் மற்றயவர்களைக்காட்டிலும் மிகுந்த செல்வாக்குடையவர்களாவர். ஏனெனில், இவர்களது செய்முறைகள் மிகவும் நேரடியாகவும் வலுவாகவும் மோதுகைத்தரப்பினர் மீது தாக்கம் ஏற்படுத்துவதுடன் அவர்களது இடையீடுகளின் நேர் விளைவுகளும், மறைவிளைவுகளும் பொதுமக்கள் பார்வையிலுள்ளன. 1990கள் பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் “சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரல்” என்ற நூலில் எடுத்துரைக்கப்பட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்பற்றிய விரிவான கண்ணோட்டத்தைச் செயல்படுத்தல்தொடர்பான ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைதரக்கூடிய கட்டத்துடன், கம்போடியா, நமீபியா, அங்கோலா, மொசாம்பிக் எல் சல்வடோர் அடங்கலான அண்மைய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுடன் ஆரம்பமாயின.

இவ்விடயங்களிலிருந்து ஐ.நா சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பொதுவான ஒரு மாதிரி உருவாகியுள்ளது. இது எதிர்த்தரப்பினரை நிலைகுலைத்தல், நிராயுதபாணியாக்கல், போராளிகளை உரிய இடத்தில் வைத்தல், தேர்தலை நடத்துவதற்கான அரசியலமைப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளுதல் இடைக்கால அரசாங்கத்தைத் தாபித்தல், பயிற்சி உட்பட சிவிலியன் அரசாங்கத்துக்கும், உட்கட்டமைப்புக்கும் ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் அத்துடன் தேவைப்படின் உள்ளூர் பொலீசின் மேற்பார்வை, மனித உரிமை நடவடிக்கைகள் கட்டமைப்பைப் புனரமைத்தல் ஆகியவற்றுக்கான இம்மாதிரி குறிப்பிடத்தக்க வெற்றியளிப்பதாகத் தோற்றியதுடன் நமீபியா, மொசாம்பிக் போன்ற சில விடயநிகழ்வுகளில் யுத்தத்திலிருந்து சமாதானமான மோதுகைகள் மீண்டும் தோன்றின. ஐநாவும், பெரிய அரசுகளும் இந்நடவடிக்கைகளிலிருந்து தொடர்ந்து பாடங்களைக் கற்று வருவதுடன், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவுகின்றன. உ-ம் இனத்துவ பொஸ்னியா, கொசோவோ. சர்வதேச இடையீடுகள் இவற்றில் போரை நிறுத்தியிருப்பதாகத் தோற்றினாலும், அடிப்படையான முரண்பாடு எவ்வளவுதூரம் நிலைமாற்றப்பட்டுள்ளதென்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இனத்துவ தேசியவாத தலைமைத்துவங்கள் தொடர்ந்தும் இருந்துவருவதுடன் இனத்துவ பிரவுகளின் யதார்த்தநிலை அடிப்படையிலான தீர்வுகள் சமாதானத்தில் இப்பிரிவுகளைப் பாதுகாத்துள்ளன.

இந்த உயர் முக்கியம்வாய்ந்த விடயநிகழ்வுகள் பிளவுபட்ட சர்வதேச சமுதாயத்தின் கணிசமான அளவு ஈடாட்ட நிலைக்குப்பின்னர் வலுக்கட்டாயமாக ஏற்படுத்தப்பட்ட தீர்வுகள் தொடர்பானவையாகும். இவற்றுள் குறிப்பிடத்தக்க மோதுகைகள் அவை வலுவடையுமுன் தடுக்கப்பட்டு அத்துடன் ஆழமான அல்லது கட்டமைப்பான மற்றும் இலகுவான அல்லது செயற்பாட்டு ரீதியான மோதுகைத்தடுப்புப் பணிகள் ஒன்றாக இணைந்து செயற்பட்டுள்ளன. இங்கு மேதுகைச் சூழமைவு மற்றும் சமூகங்களின் கட்டமைப்பு என்பவற்றிலான உண்மையான மாற்றங்கள் சில குறிப்பிடத்தக்க நிலைமாற்றங்களை ஏற்படுத்தின.



உதாரணமாக, எஸ்தோனியாவைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றியம் ஸ்கண்டிநேவிய அரசாங்கங்களின் ஆதரவுடன் தேசிய சிறுவான்மையினருக்கான OSCE உயர் ஸ்தானிகரின் பிரபலமான இடையீடுகளூடாக ஏற்பட்டிருக்கக்கூடிய ஓர் இனத்தவ மோதுகைப் பகுதியாகத் தவிர்க்கப்பட்டது. மாற்றுநிலையாக்கம் செய்யப்பட்ட பொருளாதாரச் சூழமைவு ரஷ்ய மொழிபேசும் சமூகத்தினருக்கான ஊக்குவிப்புகளை மாற்றுவதற்கு பகுதியாக உதவின. மேலும், குறுக்கு இனத்துவ வாக்களிப்புக்கான ஊக்குவிப்புகளை உருவாக்கிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமை மேலதிக பிரதான காரணியாகும். இதன்விளைவாக இனத்துவ அரசியலிலிருந்து பொருளாதார, பிராந்திய அக்கறையுடைய குழுக்களின் அரசியலுக்கான ஓர் இடைமாற்றம் ஏற்பட்டது. எஸ்தோனியரல்லாத அரசியல்வாதிகள் எஸ்தோனிய கட்சிகளில் சேர்க்கப்பட்டதுடன், எஸ்தோனிய மத்திய கட்சி தமது அக்கறைகளை மேம்படுத்தும் ஒரு கருவியாக ரஷ்ய மொழி பேசுபவர்களின் பேராதரவைப் பெற்றது. இது 1991 இன் பின்னர் எஸ்தோனிய சூழமைவு மாற்றத்தால் ஏற்படுத்தப்பட்ட மோதுகை முகாமைத்துவத்துக்கும், இனத்துவ இணக்க அணுகுமுறைகளுக்குமான ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

இரண்டாவது வகையான செயற்பாட்டாளர்கள் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான முகவராண்மைகளாவர். 1980, 1990 களில் இம்முகவராண்மைகள் யுத்தத்தால் பாதிப்புற்ற சமூகங்களை மீளக்கட்டியெழுப்பும் ஆகச்செலவுமிக்க பணியில் ஈடுபட்டதுடன், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் அபிவிருத்திக்கு ஏற்படக்கூடிய சேதத்துக்குப் பதில் நடவடிக்கை மேற்கொண்டனர். சில சந்தர்ப்பங்களில் அவர்களது நடவடிக்கைகள், உதாரணமாக மொசாம்பிக்கில் தேர்தல் களைத் திட்டமிட்டபடி நடாத்துவதற்கும் (RENAMO) ரிநாமோவை அரசியல் கட்சியாக நிலைமாற்றுவதற்கும் கொடையாளிகள் ஆதரவு வழங்கியதுபோல் ஐநாவின் சமாதானத்தைக்

கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஆதரவுவழங்கின. பிற சந்தர்ப்பங்களில் சோமாலியாவில் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் அகதிகளுக்கு கொடையாளிகள் ஆதரவளித்ததுபோல் அரசியல் திடமற்ற பிரதேசங்களில் அதிருப்தியைக்குறைக்கும் நோக்குடன் நேரடியாக மோதுகைகளைத் தணிக்கும்வகையில் அபிவிருத்தி உதவி வழிநடத்தப்படலாம். இளவயதினரான போராளிகளை மீளிணைப்பதற்கு அல்லது விவசாயக்காணிகளைப் புனரமைத்தல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் சமாதானத்தைக்கட்டியெழுப்புவதில் உதவக்கூடிய அபிவிருத்திப்பணிகளுக்கு உதாரணமாகும். இயலுமை அபிவிருத்தி, உள்நாட்டு மோதுகைகளைக் கையாளுவதற்கு ஆதரவு வழங்குதல் ஆகியவையும் முக்கியமானதாகும். வட கென்யாவில் ஒக்ஸ்பாம் மோதுகை நிலைமாற்றப்பணி அத்தகைய பணிகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும் (பெட்டி 5 ஐப்பார்க்கவும்).

அபிவிருத்தி உதவி நிச்சயமாக திட்டமிடப்பட்ட அல்லது திட்டமிடப்படாத விளைவுகளைக்கொண்டிருக்க முடியும், சிலசந்தர்ப்பங்களில் உதவி மோதுகைத்தரப்பினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் தொடர்ந்து பூசல் நீடிக்கும். மோதுகைகள்மீது அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் சுட்டிகளின் கட்டுக்கோப்பு ஒன்றைத்தாபிப்பதுமீதான நடப்புப்பணி சிறந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்குத் தேவையான கட்டுக்கோப்பின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு ஓரளவு வழிவகுக்கிறது. (இத்தொகுதியில் மார்க் ஹொப்மான், மேரி அன்டர்சன் ஆகியோரின் பங்களிப்பினைப் பார்க்கவும்). அத்தகைய சுட்டிகளின் சட்டகம் ஒன்று மேலே கூறப்பட்டதுபோன்ற முரண்பாடுகளின் முழுமொத்த நிலைமாற்றத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய கட்டுக்கோப்பு ஒன்றுடன் இணைந்திருக்க வேண்டும் இத்துறையில் அபிவிருத்தி முகவராண்மைகள் அதிகரித்த முக்கியத்துவமும், செல்வாக்கும் உடையனவாக இருந்த போதும், அவர்கள் குறிப்பிட்ட மோதுகைகளை மாற்றுநிலையாக்குவதைத் தமது பிரதான பொறுப்பாகக்கருதாது (இப்பணி இன்னமும் புதியதாகவும், பரீட்சிக்கப்படாததுமாகவுள்ளது.) பிறரது பணிகளுக்கு ஆதரவும் ஊக்கவிப்பும் வழங்குவதையே பொதுவாக தமது பிரதான பணியாகக் கருதுகின்றன. ஆகவே, அனேகமான மோதுகை மாற்றுநிலையாக்கப் பணிகள் அரசசார்பற்ற அமைப்புகளிடமே விடப்பட்டுள்ளன.



**பெட்டி 5 வட கென்யாவில் மோதுகை மாற்றுநிலையாக்கப் பணிகள்**

வட கென்யாவில் வரண்ட நிலத்தின்மீது அதிகரித்துவரும் அழுத்தம் பாரம்பரிய கால்நடை வளர்ப்பில் கலாஷ்நிகோவ் கலாசாரத்தை அறிமுகப்படுத்தல்போன்ற காரணங்களால் நாடோடி ஆயர்பாடி சமுதாயத்தினரிடையேயும், அதுபோலவே ஆயர்கள் மற்றும் வேளாண்மை செய்வோரிடையேயும் மோதுகைகள் விஸ்தரிக்கப்பட்டு தீவிரப்படுவதற்கு வழியேற்பட்டது. துர்கானா மற்றும் போகோட் அல்லது சோமாலி மற்றும் பொரானா போன்ற வரலாற்று எதிரிகள் சமுதாயங்கள்கூட தற்போது யுத்தத்தில் மூழ்கியுள்ளன. இந்த ஆயர்குல சமுதாயத்தினை இராணுவமயப்படுத்தியமை கென்யாவினதும், அண்டைப்பிரதேசங்களினதும் பாதுகாப்பில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், பாதிக்கப்பட்ட சமுதாயங்களினையும் சேதப்படுத்தியது. இதற்குப் பதில்நடவடிக்கையாக ஒக்ஸ்பாம் அமைப்பு 1997 இல் பராகுவா மேய்ச்சல் நிலக்கருத்திட்டத்தில் உள்ளூர் முதியோர்மீது நம்பிக்கைவைத்து சமாதானப்பேச்சுவார்த்தைக்கு வசதிசெய்துகொடுத்தது. இப் பிரதேசத்தில் ஒக்ஸ்பாமினால்

செயற்படுத்தப்பட்டுவரும் பணி, பிரதான அம்சமானது இம் மக்களின் கௌரவம் மற்றும் நன்னடத்தை ஒழுக்கநெறிகோவைகளுக்கு மதிப்பளிக்கும் முயற்சியும், பரகுவா ஆயரின் சொல்வழக்கு மற்றும் இனத்துவப் பகுப்பாய்வினூடாக (கோனா 1999) அவர்களது மோதுகைகளைப் புரிந்து கொள்வதுமாகும். இந்தவகையில் பாதிப்புக்குள்ளான சமுதாயத்திலுள்ள பெண்கள் குழுவொன்று 27 அரச அமைப்புக்களையும், வடகிழக்கு கென்யாவிலுள்ள அரசசார்பற்ற அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் வலையமைப்பினைக்கொண்ட வஜிர் சமாதான அபிவிருத்திக்குழுவை நிறுவியது. இக் குழுவானது ஆற்றலைக் கட்டியெழுப்புவதில் பயிற்சியளித்து, 1993 இல் யுத்த நிறுத்தமொன்றுக்கு பங்களிப்புச் செய்துள்ளதுடன் பிரதேசத்தில் உள்ளூர் மோதுகைகளைத் தடுக்கும் முயற்சியிலும், தீர்க்கும் முயற்சியிலும் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றது. (மோதுகைத் தடுப்புக்கான ஐரோப்பிய அரங்கு (1999, 152, 1999, டி1, 243 - 47)

இங்கு ஆராயப்பட்ட செயற்பாட்டாளர் குழுக்கள் அனைத்திலும் மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாடுகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது அரசசார்பற்ற அமைப்புகளேயாகும். லெடராச்சைத் தொடர்ந்து அரசசார்பற்ற அமைப்புச் செயற்பாட்டாளர்கள் நீண்டகாலப்பகுதிக்கு நிலைபேறான மட்டத்திலான ஈடுபாட்டைப் பரிந்துரைக்கின்றனர். அவர்கள் மோதுகைத் தரப்பினுள்ளேயும், வெளியேயும் உள்ள மக்களுடன் நெருங்கிப் பணியாற்றி முரண்பாடுகளுக்கான மூலகாரணம் பற்றிய ஆழமான புரிந்துணர்வைப் பெறமுயல்கின்றனர். அவர்கள் உரையாடலுக்கான ஒரு வாய்ப்பு அவகாசத்தை ஏற்படுத்தவும், சமாதானம் நோக்கிய பாதையில் உள்ளூர் அல்லது தேசிய மாநாடுகளையும், செயலமர்வு நிலைபேறாக நடாததுவதிலும், அபிவிருத்திக்கான களையும் சந்தர்ப்பங்களை இனங்காண்பதிலும், நீண்டகால அடிப்படையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும், தொடர்புகள், மற்றும் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்கும் கவனம்செலுத்துகின்றனர்.



சுவடு II செயற்படுநர்களால் பயன்படுத்தப்படும் முறைகளும், கருவிகளும் உள்ளூர் குழுக்கள், சமூக இயக்கங்கள், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் குழுக்களுக்கு ஆதரவளித்தல், வலுப்படுத்தல், பிரதான செயற்பாட்டாளர்களுக்கு அதிகாரமளித்தல், நிறுவனமுறை அபிவிருத்தி வலையமைப்புப்பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கும். இவ்வகையான பணியில் குறிப்பிடத்தக்க உதாரணமானது உள்ளூர் செயற்பாட்டாளர்களின் கூட்டிணைப்புடன் பொறுப்பேற்கப்பட்ட பிஜியிலுள்ள இலண்டனிலிருந்து இயங்கும் அரசார்பற்ற (CR) நிகழ்ச்சித்திட்டமாகும்.

மாற்று வாக்களிப்பு முறைமை, அதிகாரப்பங்கீடு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டதன்பேரில் 1996 இல் புதிய அரசியலமைப்புத் தீர்வுக்கு குறிப்பான பங்களிப்புநல்கிய அமைப்பான பிஜியிலுள்ள பிரஜைகள் அரசியலமைப்பு அரங்குக்கு CR ஆதரவளித்தது (இணைக்கப்பாட்டு மூலவளங்கள் 2000) துரதிஷ்டவசமாக 2000 மே மாதம் பிஜியிலேற்பட்ட இராணுவ சதிப்புரட்சி, குறுகிய அடிப்படையான அரசாங்கம் மீண்டும் ஏற்பட்டமை ஆகியன இத்தகைய பணியில் எதிர்கொள்ளப்பட்ட தடங்கல்களை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. பணியின் ஒரு முக்கிய தேவைநிபந்தனை குழுக்களின் கூட்டிணைப்புடன் மிகச் சிறப்பாக அபிவிருத்திசெய்யப்பட நல்ல முரண்பாட்டு ஆய்வாகும் (பெட்டி 6 ஐப் பார்க்கவும்). காலத்தோடு மாறுபடும் மோதுகைகளின் இயக்கவியலைப் பின்தொடருவது என்பது பொருத்தமாக அபிவிருத்தி செய்யப்பட்ட கோட்பாட்டின்மீது செயலாற்றவேண்டிய ஒரு விடயப்பரப்பாகும்.

**பெட்டி 6 மோதுகை ஆய்வு**

வேர் (1979) இன் மோதுகை, வரைபடத் திட்டமிடல் வழிகாட்டி மூலம் மேலும் பெறுமதியானதாகவுள்ளது. மிக அண்மைய வழிகாட்டிகளை மியால் ரம்ஸ்பொதாம், வுட்ஹவுஸ் (1999,92-3) புளூம்பீல்ட், ரெயிலி (1998, 41-43) லியொன்ஹார்ட் (2000) ஆகியோரின் பணிகளில் காணலாம். அடிப்படை உத்தியானது செயற்படுத்துநர்கள், அக்கறைகொண்டோர், பிரச்சினைகள், தொடர்புகள் ஆகியவற்றை அடையாளம் காட்டும் மோதுகைகளைப் படம்பிடித்து, பின்னர் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய தகுதியுடைய செற்பாட்டாளர்களை, மூன்றாம் தரப்பினரை அல்லது வாய்ப்புவளமுள்ள சமாதானத்தொடர்புகளை அடையாளங்காணுவதாகும். மிகவும் வளர்ச்சியுற்ற மோதுகை கண்டறியும் வழியானது நேரகாலத்தோடு எச்சரிக்கைசெய்யும்பொருட்டும், தாக்கங்களை மதிப்பீடு செய்யும் பொருட்டும் பயன்படுத்தப்படும் மோதுகைக்கான சுட்டிகள்மீது தங்கியிருக்கும் (ஷ்மிட் 1997, ஜொங்மான் 2000, இத் தொகுதியில் பலென்ஹோல்சின் பங்களிப்பினைக் காண்க).

இறுதியாவும், பிரதானமாகவும் தமது சொந்த மோதுகைகளில் மாற்றுநிலையாக்கங்களைக் கொண்டுவருவதற்கான அதிகூடிய பொறுப்பும், சந்தர்ப்பமும் உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்கே உண்டு. மோதுகைத் தரப்பினரிலிருந்து தோன்றி உரையாடல்களுக்கும், அரசியல் அவகாசவாய்ப்புக்கும் வழிவகுப்பதில் பிரதான பங்கு வகிக்கும் "நிலையூன்றிய மூன்றாம் தரப்பினரும்" உள்ளனர். - உதாரணமாக, வட அயர்லாந்தில் ஜோன் ஹியூம் சின் பெயினில் அரசியல்வடிவ போராட்டங்களைநோக்கி நகரும் நடத்துநர் மாற்றுநிலையாக்கங்களைக் கொண்டுவரக்கூடிய அரசியல் கட்சிகளுக்கிடையே உள்ள குழுக்கள், வட அயர்லாந்து குளோநார்ட் துறவிமடத்தினால் எடுத்துக் காட்டப்பட்டவாறு அரசியல் கட்சிகளிடையேயும், உள்ளூர் சமூகத்தினரிடையேயும் பாலமொன்றைக் கட்டியெழுப்புவதில் பெரும் செல்வாக்கைக் கொண்டுள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்கள், அத்துடன் வரலாற்று நினைவுகள் இணக்கப்பாட்டு பிரச்சனைகளில் கரிசனம் காட்டுவதன்மூலம் கலாசார பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் மீளிணக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள கொரிமீலா சமுதாயம் என்போர் முக்கிய பங்களிப்புகளை வழங்கினர். முரண்பாடுககளில் இந்த அமைதியைக் கட்டியெழுப்பும் பணியின் தாக்கங்கள் எவ்வளவு என பெருமளவில் மதிப்பிடுவது கடினம் ஆயினும், சிறிய அளவில் அதனால் எய்தக்கூடிய தனிப்பட்ட குழு மாற்றுநிலையாக்கங்கள் கூர்மையாக உணரப்பட்டுள்ளன.



## 3.2 கூட்டிணைப்பும், பல்சுவட்டு இராஜதந்திரமும்

பிற சுவடுகளில நிகழும் இடையீடுகளுடன் பயனுறுதியுடன் எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றமுடியும் என்பது மோதுகை மாற்றுநிலையமாக்கப் பணிகளுக்கான ஒரு குறிப்பிட்ட சவாலாகும். சிலசமயங்களில மிகவும் பயனுறுதியான விடய நிகழ்வில் கூட்டிணைப்புகள் நிகழும், உதாரணமாக மசிடோனியா விடயநிகழ்வில் போன்று (பெட்டி 7 ஐப் பார்க்க).

எவ்வாறாயினும், அநேகமான சந்தர்ப்பங்களில் பல்வேறு சுவடுகளிலுள்ள உள்ளக, வெளிவாரி செயற்பாட்டாளர்கள் அநேகமாக மாறுபட்ட நோக்கங்களைக் கொண்டவர்களாயுள்ளனர். நெறிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல்களை நோக்குமிடத்து இது ஆச்சரியமானதல்ல. உதாரணமாக, மோதுகைகளுக்கு வன்முறையற்ற தீர்வு ஒன்றைக்காணவிழையும் ஓர் அமைப்பு தீர்வு ஒன்றை ஏற்றுக்கொள்ளும்பொருட்டு உள்ளூர் புரட்சியாளர்கள்மீது அழுத்தம் கொடுக்குமுகமாக பலவந்த முறைகளில் தங்கியிருக்கும் ஓர்

அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது கடினமாகும். மறுபுறம் வெளிநாட்டு அமைச்சுக்கள் இராஜதந்திரத்தில் அரசசார்பற்ற அமைப்புக்கள் தலையிடுவதை வழமையாக விரும்புவதில்லை.

அரச மட்டத்திலல்லாத மோதுகை மாற்றுநிலையாக்க செயற்பாட்டாளர்கள் மோதுகைப் பிரதேசத்தின் கலாசாரம், பிற செயற்பாட்டாளர்களின் இலக்குகள், மட்டுப்படுத்தல்களுக்கான கூருணர்வுடன் அவர்களது நோக்கங்களைத் தொடரவேண்டும். தமது சொந்த வேலையை அவர்களது நடவடிக்கைகளால் பாதிப்புறச்செய்யும் பிற செயற்பாட்டாளர்கள்மீது தாம் செல்வாக்கு செலுத்தமுடியாதென்பதை அவர்கள் எப்போதும் நினைவில் இருத்துதல்வேண்டும். மேலும், மோதுகை மாற்றுநிலையாக்கம் மோதுகைப்பிரதேசத்துக்கு வெளியே உள்ள சுவடு 1 அமைப்புகளின் கொள்கைகளை மாற்றுவதுடன், தொடர்புற்றதாயிருக்கும்போது அவர்களது பணி மேலும் பரந்ததாகக் கூடும். உதாரணமாக, மோதுகைகள்மீது உலகவங்கி போன்ற அமைப்புக்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துமென்பது அதிகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவர்களது கொள்கைகள்மீது செல்வாக்கைச் செலுத்தும்பொருட்டு நடாத்தப்படும் இயக்கங்கள் இவ்வாறாக மோதுகை மாற்றுநிலையாக்கப்பணிகளின் ஒழுங்கான ஒரு பகுதியாகவே விளங்குகின்றன.

**பெட்டி 7**

மசிடோனியாவில் கூட்டுறவுப் பல்சுவட்டு இராஜதந்திரம் வெவ்வேறு சுவடுகளின் பல்வேறு முன்முயற்சிகள் உண்மையில் முழுநிறைவாக்குபவையாக விளங்கும் ஒரு நிலைமையைக் காணலாம் தேசிய சிறுபான்மையினர்மீதான OSCE உயர் ஸ்தானிகர் (வெளிவாரிச் சுவடு I) ஸ்கோப்ஜியிலுள்ள திறந்த சமூகநிறுவகத்துடன் (உள்ளகச் சுவடு III) இணைந்து பல்கலைக்கழகப் பிரச்சினைக்கு பல இணக்கப்பாட்டுத் தீர்வுகளை முன்வைத்தார். முன்னைய யூகோஸ்லேவியா (சுவடு I) மீதான சர்வதேச மாநாடு மசிடோனியாவுக்கும், இனத்துவ சேர்பியர்களுக்குமிடையில் ஓர் இணக்கப்பட்டைக் கொண்டுவர முயன்ற அதேவேளை, தடைகளை முடிவுக்குக்கொண்டுவந்த கிரீஸ் மற்றும் மசிடோனியாவுக்கிடையிலான ஒப்பந்தத்தை (சுவடு I) திருஹோல்புரூக்கும் அமெரிக்கஅரசாங்கமும் செய்து கொண்டன. இரு சமுதாயங்களினதும் பொதுவான தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவகையில் நீண்டகால நிழ்ச்சிகளை குறிப்பாக, அனைவரையும் உள்ளடக்கும் பத்திரிகைத் தொழிலை மேம்படுத்தல், பொதுவான கலாசார மரபுரிமைக்கான மதிப்பையும் அத்துடன் சூழலைப் பாதுகாப்பதில் இரு சமூகங்களினதும் முயற்சிகள் சம்பந்தமாக அரசசார்பற்ற அமைப்புக்களின் பொதுநிலைப்பாட்டுக்கான தேடல், வெளியகச் சுவடு III ஐ அபிவிருத்தி செய்தனர்(அக்கர்மான் 2000). இரு சமுதாயங்களுக்குமிடையே பதட்டநிலை தீவிரமாக இருந்து வந்ததுடன், கொசோவோ யுத்தத்தின் விளைவுகளால் இது மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. உண்மையில் 2000 மே ஜூன் யுத்தம் சிவில் யுத்தமாக மாறக்கூடிய அச்சுறுத்தல் இருந்தது. குழுக்களின் அடையாளத்தையும், அந்தஸ்தையும் ஏற்றுக் கொள்ளுதலை அடிப்படையாகக்கொண்ட இணக்கமின்மைகள் தீர்க்கப்படவில்லை எவ்வாறாயினும் பாரளுமன்றத்தில் இனங்களுக்கிடையிலான கூட்டணி (சுவடு I) தொடர்ந்தும் இருந்து வருகின்றது. வன்முறை மோதுகைகளைக் கட்டுப்படுத்துவதில் இது பிரதான காரணியாக உள்ளது. இவற்றை எழுதிக்கொண்டிருக்கும் இந்தவேளையில்கூட மசிடோனியாவில் பதட்டம் இன்னும் நிலவக் கூடியபோதும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள் வேறுபாகளுக்கு இடமளிக்கும்பொருட்டு உயர்மட்டத்திலேனும் குறிப்பான திறமையை உருவாக்கும்பொருட்டு இன்றுவரை ஒன்றாகப் பயனுறுதியுடன் பணியாற்றிவருகின்றனர்.

## 3.3 நடைமுறைகளின் தாக்கத்தை கணிப்பிடல்

மோதுகைகளின்மீது இத்தகைய நடைமுறைகளின் முழுமொத்தத் தாக்கம் என்ன? அதனை இன்னும் கூறுவது கடினம். சமாதான வட்டாரங்களைக் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க சாதனைகள் இருந்தமைபற்றிய அறிக்கைகள் உள்ளன. உதாரணமாக, லெடராச்சின் பணி, (1997) அண்மைய பணிகளின் தொகுப்பில் வெளிப்படையான வெற்றிகள்பற்றிய மனதில் பதியக்கூடிய விடயங்கள் சில உண்டு (மோதுகைத் தடுப்புக்கள் என ஐரோப்பிய அரங்கு 1999a,b).

மோதுகை இடையீடுகளில் கற்றபாடங்கள் எவ்வாறாயினும், அண்மைக்காலத்தில் மட்டுமே மோதுகைத் தடுப்பு, நிலைமாற்றத்தில் மேற்கொள்ளப்பட சமாதான நடைமுறைச் சிந்தனை (RPP) மோதுகை இடையீடுகளில் கற்றபாடங்களில் சில ஒப்பீட்டு ஆராய்ச்சி ஆய்வுகள் தாக்கக்ணிப்பீட்டின் பிரதான மாறிகளை அடையாளங் கண்டுள்ளன. பெர்கோவிச்சின் ஆராய்ச்சி (1996) அதிகார வஙஙகள் அடங்கலான மோதுகை முகைமைத்துவ அனுகுமுறைகளே தீர்வுகளை வழங்குவதில் மிகவும் பயனுறுதிமிக்கவை என்று கருத்துத் தெரிவிக்கின்றன. மறுபுறமாக, இத் தீர்வுகள் மோதுகைகளில் உண்மையான மாற்றுநிலையாக்கத்தை ஏற்படுத்தத் தவறுகின்றன. தொடர்புகளைக் கட்டியெழுப்பத் தேவைப்படும் நீண்ட காலப்பணி இயலுமை வலுவற்ற குறுகியகால அரசியல் தீர்வுகளை எய்துவதைவிட மிகவும் முக்கியமானதாகும்.

இனத்துவ மோதுகைகளின் முடிவுக்குச் சான்றாகவிருக்கும் முழுமொத்தச் சான்றுகள் தெளிவேற்படுத்துவனவாயுள்ளன. 1945 இல் ஐரோப்பிய, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் சமாதானமாகத் தீர்க்கப்பட்ட மோதுகைகள் தொடர்பான ஆய்வில் (பெட்ஸ்ச் மற்றும் ரொலோப் 2000) ஆய்வளர்கள் இனம் சமயம் அல்லது பிராந்திய தன்னாதிக்கம் தொடர்பான 121 பிரச்சினைகளில் 13 மட்டுமே சமாதானப் பேச்வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளன (இவை அலன்ட் தீவுகள், வட எப்பிரஸ் சார் மற்றும் தென் டிரோல் அடங்கலானவை). 51 தீர்க்கப்பட்டன, 8 பயமுறுத்தல்களாலும் வேறு வடிவிலான பலாத்காரங்களாலும் மற்றும் 49 வன்செயல்களாலும் தீர்க்கப்பட்டனவென்று தெரிவித்துள்ளனர். சமாதானமாகத் தீர்க்கப்பட்ட வழக்குகளில் பெரும்பான்மையானவை 1991 இல் சமாதானமாகப் பிரிந்துபோன முன்னைய சோவியத் யூனியன் குடியரசுக்கான தஜிகிஸ்தான், நாகொர்நோ - கரபாக் என்பவை அத்துடன் ஏனைய இடங்களில் வன்செயல் மோதுகைகள் இருந்தபோதும் முன்னைய சோவியத் யூனியனில் வன்செயல்கள் இன்றி நிலைமாற்றப்பட்ட பல் இனத்துவ மோதுகைகள் ஆச்சரியமூட்டுபவையாகும்.



இந்தச் சமாதானமான நிகழ்வுகளை அடையாளங்கண்டு ஏன் வன்செயல்கள் தவிர்க்கப்பட்டன என்றும் எவ்வாறு இனத்துவ அல்லது உள்ளக மோதுகைக்கு முகங்கொடுக்கப்பட்டது என்பவற்றுக்கான காரணங்களை நிச்சயிப்படுத்திக் கொள்வது ஒரு பயனுள்ள பணியாகும். ஆயினும், மோதுகை மாற்றுநிலையாக்க முனைப்புகளைத் திட்டமிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் மோதுகைகளைச் சுட்டியாகக்கொண்டு மதிப்பிடுவது மிகவும் செப்பனற்றதும், கொடூரமானதுமாகும். இதற்கென மிகவும் நுண்ணிய, வேறுபடுத்தப்பட்ட அணுகுமுறைகள் தேவையாகும். சமாதான மற்றும் மோதுகைத் தாக்கமதிப்பீட்டு (PCIA) பணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட சுட்டிகள் அத்தகைய ஓர் அணுகுமுறையாகும் (இத்தொகுதியில் ஹோப்மனின் பங்களிப்பைப் பார்க்க). மோதுகை மாற்றுநிலையாக்கங்களை மோதுகைக் கட்டமைப்புக்கள், தரப்பினரின் இலக்குகள், காலவோட்டத்துடனான பிரச்சினைகள் என்றவகையில் வேறுபடுத்தமுடியுமாயின் இடையீடுகளை மோதுகையிலுள்ள குறிப்பிட்ட நிலைமாற்றங்களுடன் தொடர்புபடுத்துவது இலகுவாகும்.

மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான முயற்சிகளின் தாக்கங்களை மோதுகைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒரு பிரச்சினையாகமட்டுமே கருதலாகாது. சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களுடனும் அது நேரடியாக தொடர்புகொண்டுள்ளது. அனைத்து மோதுகை மாற்றுநிலையாக்கங்களிலும்

காணப்படும் சவால்கள், சிரமங்கள், கஷ்டங்கள், தடைகள், தொடர்முயற்சிகள் ஆகியவற்றை நோக்கும்போது "மாற்றுநிலையாக்குபவர்களையும் மாற்றுநிலையாக்கவேண்டும்" என்பது புலனாகும். சமாதானக்கல்வியையும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் மேம்படுத்தி சுயசிந்தனை, ஆன்மீகத்துக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கும்பொருட்டு வடிவமைக்கும் நடவடிக்கைளில் நாம் கவனம்செலுத்தும்போது இக்குழுக்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் (பெட்டி 8ஐப் பார்க்க).

**பெட்டி 8: மாற்றுநிலையாக்கம் செய்பவர்களை மாற்றுநிலையாக்குதல், புன்னகை செய்வதை ஒரு வழிமுறையாக நோக்குதல்**

உலகின் மிகவும் குறிப்பிடத்தக்க மோதுகை மாற்றுநிலையாக்குபவர் ஒருவர் வழமையாக மோதுகைகளைப்பற்றி எந்தப்புத்தகத்திலும் வெளிவராத, மோதுகைக்கோட்பாடுகளில் முற்றிலும் காணப்படாத ஒரு வழி முறையைப் பயன்படுத்துகின்றார். அவ்வழிமுறை புன்னகை செய்வதாகும். "மூச்செடுக்கும்போது நான் எனது மனதையும் உடலையும் சாந்தப்படுத்துகிறேன். இதுவே தற்போதைய கணப்பொழுது. இதுவே ஒரேயாரு கணப்பொழுது". திச் நாற்கான் என்பவர் வியட்நாமிய பௌத்த துறவியும், கவிஞரும், தீவிர சமாதானசெயற்பாட்டாளருமாவார். மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் புன்னகை அணுகுமுறையைப் பயன்படுத்துபவர் அவர் மட்டுமல்ல. தலாய்லாமா, அடம் கேர்ல், நெல்சன் மன்டேலா ஆகிய அனைவருமே இயல்பாகவே புன்னகை பூக்கும் சுபாவமுடையவர்களாவர். திக் நாற்ஹான் என்பவர் மிகவும் சிறப்பாக புன்னகைப்பது மட்டுமல்லாது பாரம்பரிய அறிவிலும், அனுபவத்திலும் வேரூன்றியுள்ள புன்னகை பூக்கும் கொள்கைக்கும் பயிற்சிக்கும் ஒரு விரிவான வழிகாட்டலையும் தருகின்றார் (நாற் ஹான் 1987). நாம் அமைதியாக இருந்தால் நாம் மகிழ்வுடன் இருப்போம், நாம் மகிழ்ச்சியாக இருந்தால் எம்மால் புன்னகை பூத்து ஒரு மலரைப் போல் மலர முடியும் அத்துடன் எமது அமைதியினால் எமது குடும்பமும் எமது முழுச்சமூகமும் நலன் பெறும். மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறையாகப் புன்னகை பூத்தல் ஒன்றிலொன்று தங்கியுள்ள கூட்டாரம்பம் குறித்த கோட்பாட்டு அடிப்படையில் அமைந்ததாகும். புன்னகை பூக்கும் பழக்கமானது ஈடுபாட்டு அவதானத்தின் ஒரு பகுதியாக இருப்பதுடன், இந்நடைமுறையில் மோதுகை மாற்றுநிலையாக்கம் செய்பவர்கள் தம்மைத் தாமே மாற்றுநிலையாக்குதற்கான பொறுப்பையும் ஏற்கவேண்டும். ஒன்றிலொன்று சார் கூட்டாரம்பக் கோட்பாடானது ஒவ்வொன்றும் பிறிதொன்றில் தாக்கம் செலுத்துகின்றது எனக் கூறுகின்றது. சர்வம் என்பது ஏனைய அனைத்துடனும் ஆகும். மலரொன்று பகுதியாக ஒரு மலராகும். ஆனால் அது அதனுள் வெயில் மழை மண் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. மலர் மலரல்லாத கூறுகளால் ஆக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எமது சுயம் சுயமற்றதான கூறுகளால் ஆக்கப்பட்டுள்ளது. நாம் பிறரில் எம்மைக் காணமுடியும் என்பதோடு எம்மில் பிறரின் உணர்வுகள் இருப்பதையும் அறிந்துகொள்ளமுடியும். பௌத்தமத உளவியலின் பிரகாரம் எம்மில் மானசீக உணர்வுகளும், களஞ்சியப்படுத்தப்பட்ட உணர்வுகளும் உள்ளன (உள் மனதில்). நாம் எம்மை மற்றவரிலும் மற்றவரில் எம்மையும் உணரமுடியும். களஞ்சிய உணர்வில் விதைகள் அபிவிருத்தியுறுகின்றன. அவை எமது மானசீக உணர்வுகளில் பிரவேசிக்கும் போது நாம் அவற்றை நீரூற்றி வளர்க்கிறோம். மோதுகையின்போது எமது களஞ்சியப்படுத்தப்பட்ட உணர்விலுள்ள கோபம் மிகவும் வலுவடையும்வரை நாம் விதைக்கு நீரூற்றுகிறோம். அப்போது அது எமது

சிந்தனைகளையும், நடத்தையையும் ஆளுகின்றது. ஆனால், இது தவிர்க்க முடியாத ஒன்றல்ல. ஈடுபாட்டு அவதானம் குறித்த நடைமுறையால் கோபம், வேதனை, வெறுப்பு என்பவற்றைக் கருணை, மகிழ்ச்சி, அன்பு என மாற்றுநிலையாக்கம் செய்யலாம். மோதுகை மாற்றுநிலையாக்கங்கள் ஈடுபாட்டு அவதானம் போலவே அவை வளர்ச்சியடையுமென்பதைச் சரியாக அறியாமல் விதைகளை பராமரித்து, நீரூற்றி வளர்க்கின்றன. கூட்டுக் களஞ்சிய உணர்வு விதைகள் உறவுகள், மோதுகைகள் என்பவையாகும். கூட்டு மோதுகைகளில் மாற்றுநிலையாக்கம் கொண்டுவருவதற்கு எம்மிலும், எம்மைப்பற்றியும், எம்முடன் தொடர்புற்ற பிறரைப்பற்றியும் ஆழமான ஒரு விழிப்புணர்வு அவசியமாகும்.

## 4. முடிவுரை

கடந்த தசாப்தத்தில் தெளிவான மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாட்டுப் பயிற்சியும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என இக்கட்டுரை வாதித்துள்ளது. இப்புதிய அணுகுமுறையானது மோதுகை முகாமையை மோதுகைத் தீர்விலிருந்து வேறுபடுத்தலாம். மூன்று சிந்தனையாளர்களும் மோதுகைகளில் இடையீடுகள் தொடர்பாகப் பகிரப்பட்ட பாரம்பரிய சிந்தனையில் தங்கியிருப்பினும், இப்புதிய அணுகுமுறையை மோதுகை முகாமைத்துவ இடையீடுகளிலிருந்து வேறுபடுத்தலாம்.

மோதுகை மாற்றுநிலையாக்கம் பரந்த பரிமாணங்களுக்கு (சிற்றியல்பு பிரச்சினைகளிலிருந்து பேரியல்பு விடயங்களுக்கு, உள்ளூரிலிருந்து உலகளாவிய மட்டங்களுக்கு, அடிமட்டத்தினரிலிருந்து உயர்குடி செயற்பாட்டாளர்களுக்கு குறுகிய கால நீண்ட கால நேரஅளவீடுகள்) முகங்கொடுக்கும் அகல்விரிவான ஓர் அணுகுமுறையாகும். விளைவுகளை, பெறுவதற்கு உதவுதை அல்லது தீர்வுகளை வழங்குவதைவிடத் திறமையை அபிவிருத்திசெய்வதையும், கட்டமைப்பு மாற்றத்துக்கு ஆதரவளிப்பதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. அது வன்செயல்களுக்கு முந்தியகட்டத்திலும், வன்செயலுக்கு பிந்தியகட்டத்திலும் மோதுகைகளைக் கையாளுவதிலும், வழமையாகப் பூசல் நிகழும் இடத்துக்கு அப்பால் பரந்துசெல்லும் வன்மையான மோதுகைகளின் காரணங்கள் மற்றும் விளைவுகளைக் கையாளுவதையுமே நாடுகின்றது.

இக்கட்டுரையானது அதிகம் எதிர்பார்க்கும் நிலைப்பாட்டுக் கோட்பாடுகள் படிப்படியான பகுப்பாய்வு அணுகுமுறையுடன் இணைக்கப்படவேண்டுமென வாதிடுகின்றது. அதேவேளை, பகுப்பாய்வுக் கோட்பாடுகள் நேர எல்லையிலும், நோக்கவெல்லையிலும் விஸ்தரிக்கப்படவேண்டும். இக்கட்டுரையானது மோதுகைக் கோட்பாட்டை சூழமைவான மோதுகைக்கு விஸ்தரிப்பதை முன்வைப்பதுடன், மதிப்பீட்டுக்கான கோட்பாட்டியலான ஒரு கட்டுக்கோப்புப் பற்றியும் ஆலோசனை கூறுகின்றது.

இக்கோட்பாடுதொடர்பில் பல வினாக்கங்களும், இடைவெளிகளும் தொடர்ந்தும் காணப்படுகின்றன. புதிய செயற்பாட்டாளர்கள் புதிய பிரச்சினைகள் உருவாதல் அடங்கலான மோதுகைகளின் இயல்புகளை போதுமான அளவில் கையாளுவதற்குவேண்டிய, போதிய, குறிப்பான இயக்கவியல் கோட்பாடுகள் இன்னமும் எம்மிடமில்லை. அநேகமான கோட்பாடுகள் ஒன்றில் மோதுகைகளின் காரணங்களிலும், அபிவிருத்தியிலும் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் இயலுமையை உருவாக்குவதிலும் நீடித்துவைத்திருப்பதிலுமே கவனம் செலுத்துகின்றனரேயன்றி எவ்வாறு அதனைத் தடுப்போரினதும், மோதுகைகளின் காரணங்களினதும் இடைத்தாக்கம் என்னவென்பதில் போதுமான புரிந்துணர்வைப் பெறத்தவறிவிடுகின்றனர். பல்வேறு சுவடுகளில் எவ்வாறு செயற்பாடுகள் ஒன்றாகப் பொருந்துகின்றன என்பதைப்பற்றி போதுமான கருதுகோளின்றி, விமர்சனமின்றி பல்சுவட்டு இராஜாந்திரத்தைத் தழுவுவதற்கு சம்மதத்தைத் தெரிவிக்கின்றனர். இன்னும் மோதுகைகளை மதிப்பீடுசெய்வதைக் கடினமாக்கும்

மோதுகை மாற்றுநிலையாக்க நடவடிக்கைகள் பற்றிய முழுமையற்ற புரிந்துணர்வை அதிகளவாக நாம் கொண்டுள்ளோம். மோதுகை மாற்றுநிலையாக்கப்பணி விரிவடைவதுடன், அது மேலும் கடினமானதாகத் தோன்றலாம். இவ் விசாலமான துறையில் ஒரு பகுதியைமட்டுமே கையாளமுடியும். எம்மால் செய்ய முடிந்தது எல்லாம் பணியின் ஒரு பகுதியை நம்பிக்கையுடன் பொறுப்பேற்று அதனை நன்றாகச் செய்வதேயாகும். நாம் விதைகளை விதைத்து விட்டு மிகுதியை ஒன்றிலொன்று சார்ந்த கூட்டாரம்பம் கவனித்துக்கொள்ளும் என்று நம்புவோம்.

## 5. உசாத்துணை நூல்களும், மேலதிக வாசிப்பும்


Ackermann, A. 2000. *Making Peace Prevail: Preventing Violent Conflict in Macedonia*, Syracuse:Syracuse University Press.

Anderson, M. 1999. *Do No Harm: How Aid Can Support Peace – or War*, Boulder: Lynne Rienner.

Axelrod, R. 1984. *The Evolution of Cooperation*, New York: Basic Books.

Azar, E. 1990. *The Management of Protracted Social Conflict*, Aldershot: Dartmouth.

Azar, E. and John W. Burton, 1986. *International Conflict Resolution: Theory and Practice*, Boulder: Lynne Rienner and Wheatsheaf.

Bailey, S. 1993. *Peace is a Process*, Quaker Home Service and Woodbrooke College for the Swarthmore Lecture Committee.

Bercovitch, J. (ed.) 1996. *Resolving International Conflicts: The Theory and Practice of Mediation*, Boulder: Lynne Rienner.

Bloomfield, D. 1997. *Peacemaking strategies in Northern Ireland: Building Complementarity in Conflict Management Theory*, Basingstoke: Macmillan.

Bloomfield, D. and Ben Reilly 1998. "The Changing Nature of Conflict and Conflict Management," *in* Peter Harris and Ben Reilly (eds.), op. cit.

Burton, J. 1987. *Resolving deep-rooted conflict: a handbook*, Lanham, Maryland: University Press of America.

Burton, J. and F. Dukes (eds.) 1990. *Conflict: Practices in Management, Settlement and Resolution*, vol 4 of the Conflict Series, London: Macmillan.

Carnegie Commission on Preventing Deadly Conflict 1997. *Preventing Deadly Conflict*,Washington DC: Carnegie Corporation of New York.

Clark, H. 2000. *Civil Resistance in Kosovo*, London: Pluto.Cochrane, F. and Seamus Dunn 2002. *People Power: The Role of the Voluntary and Community Sector in the Northern Ireland Conflict*, Cork: Cork University Press.

Conciliation Resources 2000. *Annual Report 1999*, London: Conciliation Resources (see http://www.c-r.org)

Coogan, T. 1995. *The Troubles: Ireland's Ordeal 1966-1995 and the search for peace*, London: Hutchinson.

Corbin, J. 1994. *Gaza First: the Secret Norway Channel to Peace between Israel and the PLO*, London: Bloomsbury.

Curle, A. 1971. *Making Peace*, London: Tavistock.

Curle, A. 1987. *In the middle: non-official mediation in violent situations*, New York: Berg.

Curle, A. 1996. *Another Way: Positive Responses to Violence*. Oxford: John Carpenter.

De Reuck, A. 1984. "The logic of conflict: its origin, development and resolution," in *Conflict in World Society*, ed. M. Banks, Brighton: Harvester.

Duffield, M. 1997. "Evaluating conflict resolution," in Serbe G, Macrae J. and L Wohlgemuth, *NGOs in Conflict – An Evaluation of International Alert*, Fantoft-Bergen, Norway: Christian Michelsen Institute, 79-112.

European Platform for Conflict Prevention 1999a. *Searching for Peace in Africa: An Overview of Conflict Prevention and Management Activities*. Utrecht: European Centre for Conflict Prevention.

European Platform for Conflict Prevention 1999b. *People Building Peace*, Utrecht: European Centre for Conflict Prevention.

Fisher, R. and Loreleigh Keashly 1991. "The potential complementarity of mediation and consultation within a contingency model of third-party intervention," *Journal of Peace Research*, Vol 28, No. 1, 29-42.

Fitzduff, M. 1999. "Changing History - Peacebuilding in Northern Ireland," in European Centre for Conflict Prevention, *People Building Peace*, Utrecht: European Centre for Conflict Prevention.

Galtung, J. 1969. "Conflict as a way of life," *in* H. Freeman, Progress in Mental Health, London: J. & A. Churchill.

Galtung, J. 1996. *Peace by Peaceful Means*, London: Sage.

Galtung, J. and Carl G. Jacobsen 2000. *Searching for Peace*, London: Pluto.

Glasl, F. 1982. "The Process of Conflict Escalation and Roles of Third-parties," in G.B.Bomers and R.B. Peterson (eds.), *Conflict Management and Industrial Relations*, Boston, The Hague, London: Kluwer Nijhoff.

Harris P. and Ben Reilly (eds.) 1998. *Democracy and Deep-rooted conflict*, Stockholm: Institute for Democracy and Electoral Assistance (IDEA).

Hume, C. 1994. *Ending Mozambique‘s War*, Washington: United States Institute of Peace.

International Alert 1996. *Resource Pack for Conflict Transformation*, London: International Alert.

Jabri, V. 1996. *Discourses on Violence: Conflict Analysis Reconsidered*, Manchester: Manchester University Press.

Joongman, A. 2000. "Mapping Dimensions of Contemporary Conflicts and Human Rights Violations," *World Conflicts and Human Rights MAP 2000*. PIOOM, Leiden: Leiden University.

Kona, Epokhorr S.1999. *A framework for cross-cultural conflict resolution theory: Prospects for Cultural Contributions from Africa*, Richardson Institute, Lancaster University: Unpublished thesis.

Kriesberg, L. 1998. *Constructive Conflicts: From Escalation to Resolution*. Lanham: Rowman and Littlefield.

Krippendorf, E. 1973. "Peace Research and the Industrial Revolution", *Journal of Peace Research*, Vol 10, 185-201.

Lederach, J.P. 1995. *Preparing for Peace: Conflict Transformation Across Cultures*, New York: Syracuse University Press.

Lederach, J. P. 1997. *Building Peace: Sustainable Reconciliation in Divided Societies*, Washington, D.C.: United States Institute of Peace Press.

Leonhardt, M. 2000. *Conflict Impact Assessment of EU Development Cooperation with ACP Countries: A review of literature and practice*, London: International Alert/Saferworld.

Miall, H., Oliver Ramsbotham, and Tom Wodhouse 1999. *Contemporary Conflict Resolution*, Cambridge: Polity.

Mitchell, C. R. 1981. *The structure of international conflict*. London, Macmillan.

Mitchell, C. R. 2000. *Gestures of Conciliation: Factors Contributing to Successful Olive-Branches*, Basingstoke: Macmillan.

Nhat Hanh, T. 1967. *Lotus in A Sea of Fire*, New York: Fellowship of Reconciliation.

Nhat Hanh, T. 1987. *Being Peace*, Berkeley, CA: Parallax Press.

Pfetsch, F. and Christoph Rohloff 2000. *National and International Conflicts 1945-1995*, London: Routledge.

Phuong, C. N. 1991. "Compassionate Action in the Midst of War," *Karuna*, 11 (Spring).

Ramsbotham, O. and Woodhouse, Tom 1996. *Humanitarian Intervention in Contemporary Conflict*, Cambridge: Polity.

Rapoport, A. 1989. *The Origins of Violence*, New York: Paragon House.

Reychler, L. and Thania Paffenholz 2001. *Peacebuilding: A field guide*, London and Boulder: Lynne Rienner.

Ruane, J and J. Todd, 1996, *The Dynamics of Conflict in Northern Ireland*, Cambridge: Cambridge University Press.

Rupesinghe, K. (ed.) 1995. *Conflict Transformation*, London: Macmillan.

Rupesinghe, K. 1998. *Civil Wars, Civil Peace*, London: Pluto.

Schmid, A. 1997. "Early Warning of Violent Conflicts" in A.Schmid (ed.), *Violent Crime and Conflicts*, Milan: ISPAC (International Scientific and Professional Advisory Council of the UN Crime Prevention and Criminal Justice Programme).

Senghaas, D. 1973. "Conflict Formations in Contemporary International Society," *Journal of Peace Research*, vol.10, 163-184.



Sharp, G. 1973. *The politics of nonviolent action*, (3 vols), Boston: Porter Sargent.

Ury, W. 1999. *Getting to Peace: Transforming Conflict at Home, at Work, and in the World*, New York: Viking.

Vayrynen, R. (ed.) 1991. "To Settle or to Transform? Perspectives on the Resolution of National and International Conflicts," *New Directions in Conflict Theory: Conflict Resolution and Conflict Transformation*. London: Sage, 1-25.

Wehr, P. 1979. *Conflict Regulation*, Boulder, Colorado: Westview.

Wehr, P., Heidi Burgess & Guy Burgess (eds.) 1994. *Justice Without Violence*, Boulder: Lynne Rienner.

Weller, M. et al 2000. *Missed Opportunities of Conflict Prevention in Kosovo: A transatlantic evaluation*, Ebenhausen: Conflict Prevention Network/SWP.